Registered as a News Paper
பொழிவு: 26
குவிப்பு: 08
பக்கங்கள்: 16
விலை: 40/-
செப்ரெம்பர்:2021
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகர - விசுவாச வாழ்வை முன்னோக்கி

## வெள்ளிவிழா நிறைவில் சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்









சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் உதயமாகி 25வது ஆண்டு யூபிலி விழாவானது கடந்த 11.09.2021 அன்று கொண்டாடப்பட்டது.

மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி F.L. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் யூபிலி விழா திருப் பலியை 11.09.2021 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் முன்னைநாள் சுவிஸ் ஆன்மீகப் பணியக இயக்குனர்களான அருட்பணி. P. எமிலியானுஸ்பிள்ளை (EV) அடிகளார், அருட்பணி. C. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் ஆகியோருடன் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் ஒத்துழைப்போடு சுவிஸ் ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார். எமது பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இவ் வெள்ளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வின் போது அருட்பணி. சூ.டக்ளஸ் மில்டன் லோகு அவர்களால் திருப்பலி மற்றும் பொது வழிபாடுகளிலே பாடக்கூடிய பாடல்கள் உள்ளடக்கப்பட்ட இறுவட்டு வெளியிடப்பட்டது. மேலும் அவருடைய ஆன்மீகப்பணி தொடர எம்முடைய மறைமாவட்ட திருஅவை சார்பாக அவரை [illegible]ழ்த்திப் பாராட்டுகின்றோம்.

இந்நிகழ்வு குறித்த சிற[illegible] பக்கம் அடுத்த இதழில் இடம்பெறு[illegible]

## ஆயரின் சிறப்புப் பணி முதல்வராக நியமிக்கப்பட்ட அருட்பணி. P. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார்



கடந்த 08.07.2021 அன்று அருட்பணி. P. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயரின் சிறப்புப்பணி முதல்வராக (மன்னார், முருங்கன் மறைக் கோட்டம்) ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டார்.

தற்போது இவ் அருட்பணியாளர் மன்னார் மறைமாவட்ட குடும்ப பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயரின் சிறப்புப் பணி முதல்வரின் பணி பற்றிய விபரங்கள் குறித்து அடுத்த மாத மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

## இத்தாலி தமிழர் ஆன்மீகப் பணியகத்தில் மருதமடு அன்னைக்கு புதிய ஆலயம்



புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவான கடந்த 15.08.2021 அன்று இலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட மருதமடு மாதாவின் திருச்சுரூபமானது புனித நிக்கொலோ தொலெந்தீனோ பங்கு ஆலயத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அழகிய முயற்சியை மேற்கொண்ட அப் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி அதிரியானோ அமதி அடிகளாருக்கும் இயக்குனர் அருட்பணி. பீட்டர் அடிகளாருக்கும் பலமூர் இறை மக்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

## ஆயரின் சிறப்புப் பணி முதல்வராக நியமிக்கப்பட்ட அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் அடிகளார்



கடந்த 08.07.2021 அன்று அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் சிறப்புப்பணி முதல்வராக (வவுனியா, மடு மறைகோட்டம்) ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் அருட்பணியாளர் வவுனியா இறம்மைக்குளம் பங்கின் பங்குத் தந்தையாகவும் நியமனம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயரின் சிறப்புப் பணி முதல்வரின் பணி பற்றிய விபரங்கள் குறித்து அடுத்த மாத மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

## 83வது அகவை காணும் அருட்பணி.சேவியர் குரூஸ் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த முன்னைநாள் குருமுதல்வர் அருட்பணி. A.சேவியர் குரூஸ் அடிகளார் 03.09.2021 அன்று தனது 83வது பிறந்த தினத்தை நன்றியோடு நினைவுகூர்ந்தார். பாசமுள்ள எம் மூத்த தந்தை அவர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், அருட் பணியாளர்கள், இருபால் துறவிகள், பொது நிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா மனமார்ந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## துன்பங்கள் சிலுவைகள் ஊடாக நாம் விசுவாச முதிர்ச்சியை நோக்கி பயணிப்போம்

**அன்பு வாசக நெஞ்சங்களே!**

மீண்டும் ஒரு புதிய மாதத்தில் இயேசுவின் திருப்பெயரில் நல்ஆசீர் கூறி உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். முழு உலகுமே கொரோனா நோய் தொற்றின் தாக்கத்திற்கு உள்ளாகி வறுமை நோயினால் துன்பப்படும் இவ் வேளையில் அளவு கடந்த விதமாய் இறைவனின் இரக்கம் எம் ஒவ்வொருவரையும் பாதுகாத்து வருவதற்காக நாம் அவருக்கு நன்றி கூறுவோம். கத்தோலிக்க திருஅவையானது இம் மாதத்தில் இரு பெரும் விழாக்களை கொண்டாடுகிறது.

**அன்னை மரியாவின் பிறப்பு (புரட்டாதி 08)**

உலக மீட்பரை தன் வயிற்றில் சுமந்த மாசறு கன்னிகையான புனித மரியாவின் பிறப்பையும் அன்னையின் பிறப்பின் மேன்னையையும் நினைந்து கொண்டாடுதல்.

**திருச்சிலுவையின் மகிமை விழா (புரட்டாதி 14)**

திருச்சிலுவை மனுக்குலத்தின் மீது இறைவன் கொண்ட அன்பின் வெளிப்பாடு. திருச்சிலுவை நன்மைகளின் ஊற்று. சிலுவை அவமானத்தின் சின்னம் அல்ல மாறாக வெற்றியின் மேன்மை சின்னம் என சிலுவையின் மேன்மையையும் திருச்சிலுவை எமக்கு அருளும் தெய்வீக விடுதலையும் எண்ணி கொண்டாடுதல்.

கத்தோலிக்க இறை விசுவாசிகள் இவ்விரு பெரு விழாவையும் ஆன்ம அர்த்தமுள்ள வகையில் வெகு விமர்சையாக கொண்டாடி மகிழ்வார்கள். ஆனால் இன்றையகால சூழலில் எமது ஆலயங்கள் மூடப்பட்டு எம் வழிபாடுகள் அனைத்தும் மட்டுபடுத்தப்பட்ட நிலையில் மனிதகுலம் கொடிய நோய் தொற்றால் பாதிப்புற்று பல இழப்புகளுக்குள்ளாகி துன்பப்படுகின்றது. இக்கால சூழலில் நாம் இறை நம்பிக்கையை தளர விடமால் இயேசு கிறிஸ்துவின் இரத்தமே மனுக்குலம் முழுவதற்கும் விடுதலை அளிக்க வல்லது என்ற விசுவாசத்துடன் பயணிப்போம். வீடுகளில் இருந்து தினமும் குடும்ப செபமாலை சொல்லுவோம். அன்னையின் பரிந்து பேசுதல் / அன்னையின் உடனிருப்பில் நம்பிக்கை கொண்ட இறை சமூகமாய் துன்பங்கள் சிலுவைகள் வழியாய் நாம் விசுவாச முதிர்ச்சியை நோக்கி பயணிப்போம்.

**என்றும் கிறிஸ்துவில் - மன்னா பதிப்பாசிரியர்**

# நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்



**அமரர். அருட்பணி. பாக்கிய ரஞ்சித் அடிகளார்.**

மன்னார் மறைமாவட்டத்தின் குருவான அமரர். அருட்பணி. பாக்கிய ரஞ்சித் அடிகளார் இறைபதமடைந்த 14வது ஆண்டு நிறைவு தினத்தை 26.09.2021 அன்று நினைவு கூர்ந்து எம் அன்புத் தந்தையின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற எமது செபங்களில் அவருக்காக வேண்டிக்கொள்கின்றோம்.

## கிளரேசியன் சபையின் அருட்சகோதரர்களுக்கான
# நித்திய அர்ப்பண நிகழ்வு



கிளரேசிய துறவற சபையை சேர்ந்த 9 அருட்சகோதரர்கள் 08.09.2021 அன்று கிளரேசிய இலங்கை மாகாணத்தின் துணை முதல்வர் அருட்பணி மில்பர் வாஸ் CMF முன்னிலையில் தங்கள் நித்திய அர்ப்பணத்தை கண்டி கிளாரட் நிவாஸ் பெரிய குருமடத்தில் மேற்கொண்டனர். இவர்களில் நான்கு அருட் சகோதரர்கள் மன்னார் மறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

➡ 15

# வாழ்த்துகின்றோம் செபிக்கின்றோம்



**ஆயர் மேதகு பேரருட்கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**

திருகோணமலை ஆயர் பேரருட் கலாநிதி. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தமது ஆயத்துவ திருநிலைபபடுத்தலின் 6வது ஆண்டு நிறைவை கடந்த 25.07.2021 அன்று நினைவு கூர்ந்துள்ளார். ஆயர் தந்தையின் ஆயத்துவப் பணி மென்மேலும் சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக செபிக்கின்றோம். ●



**ஆயர் மேதகு பேரருட்கலாநிதி றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை**

காலி மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்கள் தமது பிறந்த தினத்தையும், ஆயர் அபிசேக தினத்தையும், தமது பெயர்கொண்ட புனிதரின் திருவிழா -வையும் கடந்த 31.08.2021அன்று நினைவுகூர்ந்துள்ளார். இவ் விழாக் களை கொண்டாடி மகிழும் ஆயர் தந்தை அவர்களை நாமும் வாழ்த்துகின்றோம்.

➡ 15

# உயர் கல்விக்காக உரோம் பயணம்



**அருட்பணி. A. லக்ஸ்ரன் டி சில்வா**



**அருட்பணி. V. எமில் எழில்ராஜ்**

மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் முன்னைநாள் இயக்குனரான அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அடிகளாரும், கட்டைக்காடுப் பங்கின் முன்னைநாள் பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்ராஜ் அடிகளாரும் தங்களது உயர்கல்விக்காக உரோமாபுரி சென்றுள்ளனர்.

இவர்கள் நற்சுகத்தோடும் ஆன்ம பலத்தோடும் உயர் கல்வியை கற்று எமது மறைமாவட்டத்தில் பணியாற்று -வதற்கு இறையாசீர் நிறைவாகக் கிடைக்க மறை மாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம். ●

**மன்னா வாசகர்களே,** மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

# புதிய நியமனத்திற்கான மன்னார் மறைமாவட்ட குழுக்கள் – 2021

**ஆயரின் ஆலோசனை மன்றம் (College of Consulters)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. S. எமிலியானுஸ்பிள்ளை (EV)
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் (EV)
அருட்பணி. A. ஞானப்பிரகாசம்,
அருட்பணி. S. மாக்கஸ்,
அருட்பணி. C. அந்தோனிதாஸ் டலிமா,
அருட்பணி. S. அன்ரன்

**நிதிக்குழு (Finance Committee)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. S. எமிலியானுஸ்பிள்ளை (EV)
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் (EV)
அருட்பணி. A. விக்ரர் சோசை
அருட்பணி. S. ஜெயபாலன்,
அருட்பணி. S. ஜொய்ஸ் பெப்பி சோசை,
அருட்பணி. A. யூட்குரூஸ்,
அருட்பணி. E. டெனி கலிஸ்ரஸ்,

**குருக்கள் நலன்புரிக்குழு (Priest's Welfare Board)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. S. எமிலியானுஸ்பிள்ளை (EV)
அருட்பணி. S.K. தேவராஜா (EV)
அருட்பணி. S. ஜெயபாலன்,
அருட்பணி. R. அகஸ்ரின் புஸ்பராஜா
அருட்பணி. A. யூட்குரூஸ்
அருட்பணி. S. லக்கோன்ஸ் பிகிறாடோ
அருட்பணி. A. ஆரோக்கியம்
அருட்பணி. T. நவரெட்ணம்

**குருமட மாணவர்கள் உருவாக்கல் குழு (Seminary Formation)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. P. கிறிஸ்து நேசரெட்ணம்,
அருட்பணி. A. இராயப்பு,
அருட்பணி. L. ஞானாதிக்கம்,
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர்,
அருட்பணி. A. ஞானப்பிரகாசம்,
அருட்பணி. A. கிறிஸ்ரி ரூபன் பெர்னாண்டோ,
அருட்பணி. S. பிரான்சிஸ் அசிசி,
அருட்பணி. S. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ்

**மடு உட்கட்டமைப்பு குழு (Madhu Infra Structure Committee)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம்
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர்
அருட்பணி. A. விக்ரர் சோசை
அருட்பணி. S. ஜொய்ஸ் பெப்பி சோசை,
அருட்பணி. P. ஜேசுராஜா,
அருட்பணி. B. டெஸ்மன் குலாஸ்,
அருட்பணி. F.X. றெஜினோல்ட்,
அருட்பணி. S. அன்ரன்,
அருட்பணி. S. சத்தியராஜ்,
அருட்பணி. G. அன்ரனிற்றோ அருள்ராஜ் குரூஸ்,

**மன்னா பத்திரிகை குழு (Manna Paper Committee)**
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் (EV)
அருட்பணி. M. செல்வநாதன் பீரிஸ்,
அருட்பணி. C. அந்தோனிதாஸ் டலிமா,
அருட்பணி. D. அலெக்சாண்டர் சில்வா,
அருட்பணி. S. மாக்கஸ்,
அருட்பணி. P. கிறிஸ்து நேசரெட்ணம்,
அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன்,
அருட்பணி. A. ரஜனிக்காந்,
அருட்பணி. S. வசந்தக்குமார்

**சமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழு (வாழ்வுதயம்) (Valvuthayam Board)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் (EV)
அருட்பணி. A. விக்ரர் சோசை
அருட்பணி. S. அன்ரன்,
அருட்பணி. S. ஜொய்ஸ் பெப்பி சோசை,
அருட்பணி. M. ஜெயபாலன்,
அருட்பணி. A. அமல்ராஜ் குரூஸ்,

**மறைமாவட்டக் காணிக்குழு (Land Committee)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. A. விக்ரர் சோசை,
அருட்பணி. S. ஜெயபாலன்,
அருட்பணி. S. சீமான் மரியதாசன்,
அருட்பணி. I. அன்ரனி சோசை,
அருட்பணி. S. மரியதாஸ் லியோன்,
அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன்,
அருட்பணி. G. அன்ரனிற்றோ அருள்ராஜ் குரூஸ்,
அருட்பணி. A. அமல்ராஜ் குரூஸ்,

**குருக்கள் மன்றம்**

**பதவி வழி உறுப்புரிமை (Ex - officio)**
அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி. S.K. தேவராஜா கொடுதோர் (EV)
அருட்பணி. M.P. பீற்றர் மனோகரன்,
அருட்பணி. S.ஜெயபாலன்,
அருட்பணி. A. யூட்குரூஸ்
அருட்பணி. S. லக்கோன்ஸ் பிகிறாடோ
அருட்பணி. A.. ஆரோக்கியம்

**தேர்வு செய்யப்பட்டோர் (Elected)**
அருட்பணி. S. கிறிஸ்டியன் வாஸ்,
அருட்பணி. T. நவரெட்ணம்,
அருட்பணி. S.A.H. ஜெயபாலன் குரூஸ்,
அருட்பணி. E. டெனி கலிஸ்ரஸ்,
அருட்பணி. S. ஸ்ரீபன்ராஜ்,
அருட்பணி. S. அன்ரன்,
அருட்பணி. P. கிறிஸ்து நேசரெட்ணம்,
அருட்பணி. L. ஞானாதிக்கம்,
அருட்பணி. B. டெஸ்மன் குலாஸ்,
அருட்பணி. P. லோறன்ஸ் லியோன்,
அருட்பணி. S. ஜொய்ஸ் பெப்பி சோசை,
அருட்பணி. F.X. றெஜினோல்ட்,
அருட்பணி. D. அலெக்ஸ்சாண்டர் சில்வா

**ஆயரின் தெரிவு (Nominated)**
அருட்பணி. A. ஞானப்பிரகாசம்
அருட்பணி. C. அன்தோனிதாஸ் டலிமா
அருட்பணி. S. மாக்கஸ்
அருட்பணி. தேவராஜா OMI
அருட்பணி. அந்தோனி ஜோசப் IVD

**தவறுக்கு வருந்துகிறோம்** அருட்பணி. S. லுமன் லோகு அவர்கள் வங்காலைப் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மழுவராயர் கட்டையடம்பன் புனித செபமாலை மாதா ஆலயம்



கடந்த 07.08.2021 அன்று சனிக்கிழமை மழுவராயர் கட்டையடம்பன் புனித செபமாலை மாதா ஆலயம் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு F.L. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பரீட்சார்த்த பங்காக அறிவிக்கப் பட்டது. இந்த திருப்பலியிலே மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் அடிகளார், ஆயரின் சிறப்புப்பணி முதல்வர் P. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் கற்கிடந்தகுளம் பங்குத்தந்தை L. சுரேத்திரன் றெவ்வல் அடிகளார் மழுவராயர் கட்டையடம்பன் புதிய பங்கின் பங்குத்தந்தை செ. ஸ்ரீபன்ராஜ் அடிகளார் ஆகியோர் இத்திருப்பலியிலே பங்கெடுத்தார்கள்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பங்குத்தந்தையுடன் இணைந்து பங்குமக்கள் மிகவும் திறமையாகவும் முன் ஆயத்தங்களோடும் செய்திருந்தார்கள். இந்த புதிய பங்கு கிட்டதட்ட 200 கத்தோலிக்க குடும்பங்களைக் கொண்டது. இது நீண்டகாலமாக தனிப்பங்காக உயர்த்தப்பட வேண்டுமென்ற மக்களின் விருப்பம், அவர்களுடைய விசுவாசம், ஆன்மீகம், செபம் அதன் பயனாக எமது ஆயர் தலைமையில் பரிட்சார்த்த பங்காக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.●

# பெரியகோமரசன்குளம் பங்கின் ஆவணி திருவிழா



மன்னார் மறைமாவட்ட பெரிய கோமரசன்குள பங்கின் புனித பரலோகமாதா திருவிழா ஆவணி மாதம் 22ஆம் திகதி கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. B. றொசான் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இத்திருப்பலியில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக அருட்சகோதரிகள், மேய்ப்புப் பணிச்சபை உறுப்பினர்கள், வழிப்பாட்டுக்குழு உறுப்பினர்கள் மற்றும் பாடகர்குழாம் ஆகியோர் மட்டுமே கலந்துகொண்டனர்.

திருப்பலி நிறைவிலே அன்னையுடைய திரு சுரூப ஆசீர் நடைப்பெற்றது. கொடியேற்ற நாளாகிய ஆவணி 15ஆம் திகதியில் இருந்து திருவிழா வரைக்கும் ஆயத்த வழிபாடுகள் அனைத்தையும் அருட்பணி B. றொசான் அடிகளார் சிறப்பான முறையிலே ஒழுங்கமைத்திருந்தார்.

# முள்ளிக்குளம் புனித பரலோக மாதா திருவிழா



கடந்த 26.08.2021 அன்று பாரம்பரிய கத்தோலிக்க மக்களைக் கொண்ட கத்தோலிக்க கிராமமாகிய முள்ளிக்குள பங்கின் புனித பரலோகமாதா ஆலயத் திருவிழாவானது காலை 6.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பித்து 7.30 மணிக்கு சிலாவத்துறை பங்குத்தந்தை அருட்பணி. N. பெகிலன் குருஸ் அடிகளார் தலைமையில் சிறப்பான முறையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்கு மக்களின் ஒத்துழைப்போடு பங்குத்தந்தை அருட்பணி. மேரிபஸ்ரியன் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார். சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து ஒரு சிலரே இதில் கலந்து கொண்டனர். ஏனைய கிராம மக்கள் தத்தமது இல்லங்களிலிருந்தே ஒலிபெருக்கி மூலம் திருப்பலியை தியானித்து அன்னையின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டனர். என்பது குறிப்பிடதக்கது.●

# வயோதிபர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் பகிர்ந்தளிப்பு



கடந்த 27.08.2021 அன்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் பட்டித்தோட்டத்தில் இயங்கிவரும் அன்புக்கன்னியர் வயோதிபர் இல்லத்துக்கு 74 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருட்கள் கொண்ட பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நடை பெற்றது. இப் பொருட்களை தேசிய சமாதான பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி மையம் ஆகிய இரண்டும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். மன்னார் பிரதேச சர்வமத பேரவையினர் இதற்கான முன்னேற்பாட்டு செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தது இருந்தனர்.●

# நொச்சிக்குளம் புனித அடைக்கல அன்னை ஆலய திருவிழா



நொச்சிகுளம் புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழாவானது கடந்த 08.09.2021 அன்று காலை 6.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பித்து 6.30 மணியளவில் அருட்பணி. ஜேசுதாசன் செபஞானம் SDB அடிகளாரினால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்-பட்டது. சுகாதார விதிமுறைகளுக்கமைய பங்குமக்களின் ஒத்துழைப்போடு பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

திருப்பலியை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தை சுற்றி அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு ஈற்றில் திருச்சுரூப ஆசீர்வாதம் இடம்பெற்றது. ●

# முதலாவது வாக்குத்தத்தை நிறைவு செய்த அருட்சகோதரர் மெக்டலொஸ் பேர்டினன்ற் (அமதி)

அமலமரி தியாகிகள் சபையின் அருட்பணியாளராக துறவற ஆடையை பெற்று தனது முதலாவது வாக்குத்தத்தை நிறைவு செய்தார் அருட்சகோதரர் மெக்டலொஸ் பேர்டினன்ற்.

அன்றைய தினம் பண்டாரவளையில் அமலமரி தியாகிகள் சபையின் மாகாண முதல்வர், ஆயர் அவர்கள், மற்றும் அருட்பணியாளர்கள் முன்னிலையில் தனது இறைபணியில் முதலாவது வாக்குத்தத்தை நிறைவு செய்திருக்கும் அருட்சகோதரர் மெக்டலொஸ் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

கலப்பையில் கைவைத்தபின் பின்னால் பார்க்க கூடாது என்ற வார்த்தைக்கமைய அமரர் அருட்பணி எட்வின் அடிகளாரின் உந்துதலில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு இறை பணிக்கென அர்பணித்திருக்கும் அருட்சகோதரருக்கு ஆசீரும், செபங்களும் உரித்தாகட்டும்.

இறைவன் தாமே ஆன்மீக பணியில் அவரை வழிநடத்தி தமது ஆசீரால் நிரப்ப செபிப்பதுடன் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.●

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### செப்ரெம்பர்2021

05. புனித அன்னை திரேசா திருவிழா - புதிய கோயில்குளம்
08. புனித அடைக்கல அன்னை திருவிழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், விடத்தல் தீவு, எழுத்தூர், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, சாளம்பன், மூங்கில்முறிச்சான், வேளாங்கண்ணிநகர், பாரதிபுரம், கங்கங்குளம், கணேசபுரம், பறன்நட்டகல், நொச்சிக்குளம்.
 - புனித வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு, கங்கன்குளம், புதிய கற்பகபுரம், நெடுங்குளம், நடுக்குடா, பள்ளிமுனை, கணேசபுரம்
 - புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - பூம்புகார், கருவேப்பங்குளம்
 - புனித சதாசகாய அன்னை திருவிழா -தலைமன்னார் பியர்
 - புனித அங்காமத்து மாதா திருவிழா - குஞ்சுக்குளம்
09. புனித வேளாங்கண்ணி திருவிழா - பாலியாறு (தேவன்பிட்டி), தோணிக்கல், எல்லப்பர் மருதன்குளம்
11. புனித வேளாங்கண்ணிஅன்னை திருவிழா - கட்டுக்கரைகுளம்
13. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - கருவேப்பங்குளம்
14. குருசுக்கோவில் திருவிழா - மன்னார்
 - திருச்சிலுவை அருட்சகோதரிகள் விழா
15. புனித வியாகுல அன்னை திருவிழா - அடம்பன், சின்னவலயன்கட்டு
 - புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - வவுனியா வைத்தியசாலை
16. புனித வேளாங்கண்ணி திருவிழா - ஓமந்தை
 - புனித அடைக்கலமாதா - முருகனூர்
19. புனித வேளாங்கண்ணி திருவிழா - கருங்கண்டல்
21. புனித சதாசகாய மாதா ஆலயம் - கந்தபுரம்
22. புனித சிந்தாத்திரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு
 - அருட்பணி. பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரின் நினைவு தினம் (2011)
24. புனித சிந்தாத்திரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை, மடுறோட்
26. புனித சதாசகாய மாதா திருவிழா - சகாயமாதாபுரம், சாவற்கட்டு
 - அருட்பணி. பாக்கியறஞ்சித் அடிகளாரின் நினைவு தினம் (2007)
28. புனித வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைகுளம்
 - புனித அடைக்கல மாதா திருவிழா - கருவாஞ்சிக்குளம்
29. புனித மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை, தாலிக் -குளம், பள்ளிமுனை
 -புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

## எழுத்தூர் புனித அடைக்கல மாதா ஆலய திருவிழா



எழுத்தூர் புனித அடைக்கல மாதா ஆலயத் திருவிழாவானது கடந்த 08.09.2021 அன்று காலை 6.30 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. A. விக்ரர் சோசை அடிகளாரினால் திருவிழாத் திருப்பலியானது ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி. T. நவரெட்ணம் அடிகளார் இத் திருப்பலிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். தற்பொழுது நிகழும் பெருந்தொற்று காரணமாக சுகாதார விதிமுறைகளுக்கமைவாக குறைந்தளவான மக்களே திருப்பலியில் கலந்து கொண்டிருந்தனர். ஏனையோர் வீடுகளில் இருந்தவாறு ஒலிபெருக்கியின் மூலம் திருப்பலியை தியானித்து அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொண்டனர்.●

## விடத்தல்தீவு புனித அடைக்கல அன்னை ஆலய திருவிழா




கடந்த 30.08.2021 அன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின. 08.09.2021 அன்று காலை 6:30 மணிக்கு விடத்தல்தீவு புனித அடைக்கல அன்னை ஆலய திருவிழா திருப்பலியானது அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்பணி. சீ. அல்ஸ்ரன் றோச் அடிகளாரால் நிறைவேற்றப் பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. S. லக்கோன்ஸ் அடிகளாரினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. ஏற்கனவே திட்டமிடப்பட்ட முறையில் அல்லாமல் சமகால சூழல், நிலவி வரும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பாடகர் குழுவில் தெரிவு செய்யப்பட்ட சிலரும் அன்றாட வழிபாடு வாசகர்களும் மட்டுமே ஆலயத்தினுள் உள்வாங்கப் பட்டு வழிபாடுகள் நிறைவேற்றப்பட்டன.

ஏனையோர் வீடுகளில் இருந்தவாறு ஒலிபெருக்கி மூலமாகவும் முகநூல் பக்கத்தில் நேரலையாகவும் வழிபாடுகளில் இணைந்துகொள்ள கூடியதாக இருந்தது.●

## கிளரேசியன் சபையின் புதிய திருத்தொண்டர்கள்



கிளரேசிய துறவற சபையை சேர்ந்த அருட் சகோதரர்கள் ஜோன்சன் CMF, ஆன்றோய் CMF 09.09.2021 அன்று திருத்தொண்டர்களாக பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்ஸ்ரன் பெர்னாண்டோ SSS ஆண்டகை அவர்களால் கண்டி கிளாரட் நிவாஸ் குருமடத்தில் திருநிலைப்படுத்தப் பட்டனர்.●

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான
ஆக்கங்களைச் சுருக்கமாகவும்,
கருத்தாழமிக்கதாகவும்
எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு
மன்னாவில் பிரசுரிப்போம்
**- மன்னா நிர்வாகம் -**

# உலகத் திருஅவைச் செய்திகள்

## Laudato Si' அமைப்பு உருவாக்கிய "ஆபிரகாமின் கூடாரம்"




இத்தாலியில் செயலாற்றிவரும் Laudato Si' அமைப்பின் 100 பிரதிநிதிகள் கடந்த 01.09.2021 அன்று படைப்பைப் பாதுகாக்கும் உலக இறைவேண்டல் நாள் கடைப்பிடிக்கப்பட்ட வேளையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் புதன் மறைக்கல்வி உரைக்குப் பின்னர் அவரைச் சந்தித்து "இவ்வுலகம் அனைவருக்கும் உரிய இல்லமா? கடவுளின் இல்லத்தை மீண்டும் புதுப்பிக்க" என்ற மையக் கருத்துடன் இவ்வாண்டு, செப்ரெம்பர் 1 முதல் ஒக்டோபர் 4 முடிய சிறப்பிக்கப்படும் படைப்பின் காலத்திற்கென அவர்கள் உருவாக்கியிருந்த "ஆபிரகாமின் கூடாரம்" என்ற அடையாளத்தை திருத் தந்தைக்கு பரிசாக வழங்கினர். தன் கூடாரத்திற்கு முன்வந்து நின்ற மூன்று விருந்தினரை ஆபிரகாம் வரவேற்று அவர்களுக்கு விருந்தளித்ததை நினைவுறுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்ட இந்தக் கூடாரம் இவ்வுலகம், அனைவரையும் வரவேற்கும் ஓர் இல்லமாக இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது என்று, இவ்வமைப்பினர் விளக்கமளித்துள்ளனர்.●

## கோவிட் காலத்திற்குப்பின் உருவாகவுள்ள "உடன்பிறப்பு சமுதாயம்"

கடந்த 06.09.2021 அன்று ஐக்கிய அமெரிக்க நாட்டில் சிறப்பிக்கப்பட்ட தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஆயர் பேரவையின் உள்நாட்டு நீதி மற்றும் மனிதகுல வளர்ச்சி பணிக்குழுவின் தலைவர் பேராயர் பவுல் ஹோக்லே அவர்கள் கோவிட் காலத்திற்குப் பின்னான சமுதாயம் உடன்பிறப்பு உணர்வு நிறைந்த ஒன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார். மேலும் அவர் கோவிட் பெருந்தொற்று தீவிரமாக இடம்பெற்று வந்த 2020 பங்குனிக்கும் 2021 மாசிக்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் 47 வீதமானோர் வேலையின்மையால் வருமான இழப்புக்களைச் சந்தித்தாகவும், தற்போது அந்த எண்ணிக்கை பெரிய அளவில் குறைந்துள்ளது. உலக அளவில் இந்த கோவிட் பெருந்தொற்று காலத்தில் மனிதர்களை வியாபாரப் பொருட்களாக கடத்தும் நிலை அதிகரித்து உள்ளது. கோவிட் பெருந்தொற்றால் அமெரிக்காவில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளதையும், 43,000 குழந்தைகள் பெற்றோரில் ஒருவரை இழந்துள்ளதையும், 1 கோடியே 30 இலட்சம் குழந்தைகள் உட்பட 4 கோடியே 20 இலட்சம் பேர் இவ்வாண்டில் உணவுப் பற்றாக்குறையை சந்தித்ததையும் தன் தொழிலாளர் தின அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.



உடன்பிறப்பு உணர்வையும் சரிநிகர் தன்மையையும் உள்ளடக்கிய பொருளாதார அமைப்புமுறை உருவாக்கப்பட வேண்டும் என்ற அழைப்பை முன்வைத்ததுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டில் கோவிட் பெருந்தொற்றின் முதல் 6 மாதங்களில் அவசரகால உதவியாக 40 கோடி டொலர்களை கத்தோலிக்க துயர் துடைப்பு அமைப்புக்கள் வழங்கியுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார்.●

## இன்னல்களின் மத்தியிலும் இறையழைத்தல்கள் அதிகரிப்பு



வியட்நாம் நாட்டில் கோவிட்-19 பெருந்தொற்றின் நான்காவது அலையின் தாக்கம் அதிகமாக இருந்தாலும் இவ்வாண்டின் கோடையில் அந்நாட்டில் 78 திருத்தொண்டர்கள் அருட்பணியாளர்களாகத் திருப்பொழிவு செய்யப் பட்டுள்ளனர். அத்துடன் ஏறத்தாழ 250 இருபால் துறவியர் தங்களின் இறுதி அர்ப்பணங்களை எடுத்துள்ளனர். இந்த இறையழைத்தல்கள் வியட்நாம் திருஅவைக்கு நற்செய்தியாகவும், நம்பிக்கையின் அடையாளமாகவும் உள்ளது என்று பீதேஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

பெருந்தொற்றால் "பச்சைக் குறிகள்" இடப்பட்ட தென் பகுதி மறைமாவட்ட கத்தோலிக்கர் திறந்த வெளிகளில் எளிமையான முறையில் திருப்பலிகளில் பங்குகொள்கின்றனர் என்று கூறியுள்ளது. வழிபாடுகள் நடைபெற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இந்நிகழ்வுகள் ஆடம்பரமின்றி அவரவர் துறவு இல்லங்கள் மற்றும் அருட்பணித்துவ பயிற்சி கல்லூரிகளில் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் பற்றி அறிக்கை வெளியிட்ட Ho Chi Minh பேராயர் Joseph Nguyen Nang அவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் சிறப்பாக கோவிட்-19 பெருந்தொற்று சூழலில் தங்களின் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும், பிறரன்பிற்கும் சான்றுகளாக வாழுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் கோவிட்-19 பெருந்தொற்றால், "சிவப்பு குறிகள்" இடப்பட்டுள்ள பகுதிகளில், அருள்பணியாளர்கள் திருப்பொழிவு, மற்றும், இருபால் துறவியரின் இறுதி அர்ப்பண நிகழ்வுகள், தற்போது தள்ளி வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.●

### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1000/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 4000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பக்கம்

# அன்னையின் அற்புத அவதார மகிமையின் தேடல்

தேடலில்
V.J.சுயாட் - விடத்தல்தீவு பங்கு

உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் தாய் அன்னை மரியாள் ஆவார். கத்தோலிக்க நம்பிக்கையின் படி அன்னை மரியாள் தூய ஆவியினால் தன் கன்னிமைக்கு எவ்வித களங்கமும் இன்றி மீட்பர் இயேசுவை தன் உதரத்தில் தாங்கினாள். உருவற்ற இறைவன் மனித குலத்தை பாவ இருளில் நின்று மீட்டெடுப்பதற்காக மரியாவின் கருவில் மனித உரு எடுத்து அவதரித்ததினால் அவர் மீட்பரின் தாய் என அழைக்கப்படுகிறார்.

**அன்னையின் பிறப்பு**

எருசலேம் என்ற நகரிலே பெரும் செல்வரும் இறைபற்றாளருமான யோவாக்கின் (சுவக்கீன்) அவரது மனைவி அன்னா (அன்னம்மாள்) இருவரும் நல் இல்லறம் நடத்தி வந்தனர். இவர்கள் பல ஆண்டு காலமாய் தம் முதுமை வயதை எய்திய நிலை வரை குழந்தை பேறு இன்றி மனத்துயருடனே வாழ்ந்து வந்தார்கள். தொடக்கத்திலே வாக்களித்த இறைவன் தனது மாட்சியின் சாயலான அன்னை மரியாவை இவர்கள் மூலம் உலகிற்கு வழங்க திருவுளம் கொண்டார். இறைவன் தமது இறை தூதர் வழியாக மரியாவின் பிறப்பை அவர்களுக்கு அறிவித்தார்.

தமது முதுமையில் இறைவன் தமக்கு அருளிய பிள்ளை செல்வத்தை எண்ணி அவர்கள் மிகவும் மனம் மகிழ்ந்தனர். அவர்கள் இருவரும் தமக்கு பிறக்கும் குழந்தையை எருசலேம் தேவலயத்தில் அர்ப்பணிப்பதாக நேர்ந்து கொண்டார்கள். அன்னா கருவுற்ற 10ம் மாதத்தில் தனது குழந்தையை பெற்றெடுத்தார். வானதூதர் அறிவித்ததன் படியே குழந்தைக்கு "மரியா" அதாவது கடலின் நட்சத்திரம் என பொருள்படும் எனும் பெயரை இட்டார்கள்.

தனது பெற்றோரின் பராமரிப்பில் அன்னை வளர்ந்து வந்தாள். மரியாவிற்கு 03 வயதான போது அவரது பெற்றோர் மரியாவை எருசலேம் ஆலயத்தில் அர்பணித்தார்கள்.

எருசலேம் தேவாலயத்தின் மூத்த குரு செக்கரியா அவரை வரவேற்றார். மரியா தனது மூன்று வயது முதல் எருசலேம் தேவாலய கல்விக் கூடத்தில் எபிரேய எழுத்துக்களை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் கற்றுக் கொண்டார். திருவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல்களை நன்கு வாசித்தறிந்து கொண்டார். பழைய ஏற்பாட்டு நூல்களில் குறிப்பிடப்படும் மெசியா பற்றிய இறைவாக்குகளின் மறை பொருளை கேட்டு தெரிந்து கொண்டார். மெசியாவின் பிறப்பு பற்றிய இறைவாக்குகளை அறிவதில் மிகவும் ஆர்வமாய் இருந்தார். மறைநூலை நன்கு வாசித்து மறை நூலில் கூறப்பட்டடுள்ளவற்றை தன் மனதில் தன் சிந்தனையில் இருத்தி தியானித்து வந்தார்.

பாடல்களை பாடுவதிலும் இசை மீதான மிகுந்த ஈடுபாட்டிலும் இறைவேண்டல் செபிப்பதிலும் அன்னை மரியாள் சிறந்து விளங்கினார்.தமது இளமை காலங்களில் நெய்தல் கலை (தையல் கலை) யினை கற்று அதில் சிறந்த புலமை பெற்றார். தையல் கலைதனில் சிறந்த தேர்ச்சி பெற்றவராக இவர் விளங்கியதால் எருசலேம் தேவாலயத்திற்கு தேவையான திரைச் சீலைகளை நெய்தல் ஆலயத்தில் பயன்படுத்தப்படும் அழகு வேலைப்பாடுகள் நிறைந்த துணிகள் சீலைகளை நெய்தல் ஆலய திருப்பண்டங்கள் பொருட்களை அலங்கரித்தல் அவற்றை பராமரித்தல் போன்றவற்றை தனியாக தானே செய்து வந்தார்.

**அன்னை மரியாளின் இளமையும் திருமண ஒப்பந்தமும்**

அன்னை மரியாள் அவரது இளமை பருவத்தில் மிகுந்த அழகு கொண்டவளாயும் அன்பானவளாகவும் இறை கல்வியில் சிறந்தவராகவும் இருந்தாள். எருசலேம் நகர் வாழ் சமூகத்திலே இறை அச்சம் கொண்ட ஒரு பெண்ணாக கன்னிகையாக வாழ்ந்து வந்தார். மரியாவிற்கு பதின்நான்கு வயதான போது அவருக்கு திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளை அவருடைய பெற்றோர் மேற்கொண்டார்கள். அவரது சமூகத்தில் வாழ்ந்த தச்சுத் தொழில் செய்பவரான யோசேப்பின் கோலில் லீலி மலர் துலங்கச் செய்து மரியாவின் துணைவர் யோசேப்பு என்பதை இறைவன் அடையாளம் காட்டினார். கன்னி மரியாவிற்கும் யோசேப்பிற்கும் திருமண ஒப்பந்தம் நடந்து முடிந்தது. தனது தச்சுத் தொழில் காரணமாக கட்டட வேலைகளுக்காக யோசேப்பு வெளியூர் சென்றார்.

இவ் வேளையில் தான் வானதூதர் கபிரியேல் ஆண்டவர் இயேசுவின் பிறப்புப்பற்றி அன்னை மரியாவிற்கு அறிவித்தார். தன்னை இறை திருவுளத்திற்கு முற்றும் அர்ப்பணித்தவளாய் "அப்படியே ஆகட்டும்" என தன்னையே தனது வாழ்வையே இறைவனுக்காய் அர்பணித்து மீட்பின் தாயானாள்.

மரியா கருவுற்றிருப்பதை தன் உறவினர்கள் மூலம் அறிந்து கொண்ட யோசேப்பு மனக் கலக்கமுற்று துயரமடைந்தார். தமக்குள் மணஒப்பந்தம் மட்டுமே ஏற்பட்டுள்ள நிலையில் தனது மனைவி கருவுற்றிருப்பது அவரது உள்ளத்தில் சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தியது. ஆகவே அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாக விலக்கி விடும் எண்ணத்தை தன் சிந்தனையில் கொண்டார்.

இவ்வேளையில் இறைதூதர் யோசேப்பின் கனவில் தோன்றி இறைவனின் திட்டப்படி மரியா தூய ஆவியினால் இறை மீட்பரை தனது உதிரத்தில் சுமந்துள்ளார் என்பது யோசேப்புக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இறை உண்மையை உணர்ந்து கொண்ட யோசேப்பு மனித மீட்பிக்கு தன்னையும் ஓர் கருவியாய் அர்பணித்து மரியாவை தன் வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொண்டார். அன்று முதல் இருவரும் ஒரே குடும்பமாய் வாழ்ந்து வந்தனர். இத்திருக்குடும்பம் நசரேத்தில் முன்மாதிரிகையான சிறந்த குடும்பமாய்



திகழ்ந்தது. யோசேப்பு தச்சுத் தொழிலையும் தம் வாழ்வாதாரமாய் கொண்டு சிறுவன் இயேசுவை ஞானத்திலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வளர்த்தார்கள். அன்னையின் வளர்ப்பில் இயேசு பெற்றோருக்கு பணிந்து தனது தந்தையின் தொழிலை கற்று அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வந்தார்.

திருகுடும்பத்தின் தலைவியான மரியாள் யோசேப்பிற்கு ஓர் நல்ல மனைவியாகவும் ஓர் சிறந்த அன்புத்தாயாகவும் மிளிர்ந்தாள். மீட்பராய் மனித அவதாரம் எடுத்த இயேசுவையும் அவர் தாய் மரியாவையும் தனது உடல் உழைப்பின் மூலம் பாதுகாக்கும், பராமரிக்கும் பொறுப்பை யோசேப்பு நிறைவேற்றினார். அவருக்கு முதுமை ஏற்பட்ட போது நோயுற்ற யோசேப்பு மரியாவும் இயேசுவும் தன் அருகில் இருக்க பாக்கிய மரணம் அடைந்தார். யோசேப்பு மரணம் அடைந்த பின்னர் இயேசு தச்சுத் தொழில் செய்து தன் அன்னையை பேணி வந்தார். இயேசு தனது 30 வயதில் இறையரசு பணியை தொடங்கிய காலம் முதல் இயேசுவின் பணிவாழ்வில் மரியாவும் அவரை பின் தொடர்ந்தார்.

இயேசு கிறிஸ்து செய்த முதல் புதுமையே அன்னை மரியாவின் பரிந்து பேசுதல் மூலமே நிகழ்ந்தது. தாய்மைக்குரிய அன்புடனும் இறைதிருவுளத்தை நிறைவேற்றும் சீடருக்குரிய உள்ளத்துடனும் மரியா இயேசுவை பின்பற்றி வாழ்ந்தார். தன் இளமையிலேயே அன்று "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவி பாயும்" என்ற சிமியோனின் வார்த்தைகளை சுமந்தவளாய் இயேசுவின் பாடுகள் வேதனைகளில் மரியா பங்கேற்றார். சிலுவையின் அடியில் துன்பத்தின் தாயாக நின்ற அன்னை மரியாவை "இதோ உன் தாய்" என்ற வார்த்தைகள் மூலம் எம் அனைவருக்கும் உலகிற்கும் தாயாக தந்தார். இயேசுவின் பாடுகள் மரணம் விண்ணேற்றத்தின் பின் இயேசுவின் சீடர்கள் அனைவரும் மரியாவின் வழிகாட்டுதலிலும் ஆலோசனையிலும் வாழ்ந்து வந்தார்கள். திரு அவை தோற்றம் பெற்ற அன்று அன்னை மரியாவும் சீடர்களுடன் இணைந்து வேண்டுதல் செய்து கொண்டு இருந்த போது தான் ஆவியின் அர்ச்சிப்பை பெற்றவர்களாய் சீடர்கள் ஊட்டம் பெற்று பல்வேறு நாடுகளுக்கும் நற்செய்தியை அறிவிக்க சென்றார்கள். அதன் பின்னர் திருதூதர் யோவானின் பாதுகாப்பில் மரியா வாழ்ந்து வந்தார். இயேசு விண்ணேற்றம் அடைந்ததன் பின்னர் 16 ஆண்டுகள் அன்னை மரியாள் இவ் உலகில் வாழ்ந்து நற்செய்தி அறிவிப்பு பணியிலும் திரு அவையை கட்டியெழுப்பும் பணியிலும் தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார். அன்னை மரியாள் நோயுற்றிருந்த வேளையில் பல்வேறு நாடுகள் தேசங்களில் நற்செய்தி அறிவிப்பு பணியில் ஈடுபட்டிருந்த திருதூதர்கள் சீடர்கள் அனைவரும் தமது உள்ளுணர்வால் தூண்டப்பட்டு எருசலேம் வந்தார்கள். அன்னை மரியாள் மரணப்படுக்கையில் இருந்த வேளை திருதூதர் தோமாவை தவிர ஏனைய திருதூதர்கள் அனைவருக்கும் ஆசீர் வழங்கிய நிலையில் அன்னை மரியாள் மரணம் அடைந்தாள். யூத முறையின் படி மரியாவின் உடலை திருதூதர்கள் அடக்கம் செய்தனர். தனது பணியின் போக்குவரத்தின் தாமத நிலையினால் தாமதமாய் எருசலேமிற்கு வந்து சேர்ந்த தோமா அன்னையின் வதனத்தை அன்னையின் இறுதி ஆசீரை பெற முடியாமல் போனதை குறித்து மிகவும் வருத்தமுற்றார். அன்னை மரியாவின் திருமுகத்தை ஒருமுறை என்றாலும் தான் காண ஆவலாய் இருப்பதாய் தோமா திருதூதர்களிடம் தெரிவித்து கொண்டே இருந்தார்.

தோமாவுடன் சேர்ந்து திருத்தூதர்கள் எல்லோரும் மரியாவை அடக்கம் செய்த கல்லறைக்கு சென்றார்கள். அவர்கள் சென்று பார்த்த வேளையில் அன்னை மரியாவின் உடலை காணாமல் திகைப்படைந்தார்கள். அவ் வேளையில் அக் கல்லறையில் நிலவிய விண்ணக நறுமணம் திருதூதர்களுக்கு ஓர் இறை உண்மையை உணர்த்தியது இறைவன் தன் அன்னையின் உடலை இவ் உலகில் அழிய விடாமல் மரியாவை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார். தோமா அன்னையின் அன்பை தன் உள்ளத்தில் எண்ணி மிகவும் வேதனைப்பட்டவாறே இருந்தார். அவ் வேளையில் அன்னை மரியா தோமாவுக்கு தோன்றி வானதூதர் புடைசூழ விண்ணக மாட்சியில் தான் வீற்றிருப்பதை தோமாவிற்கு காட்சி மூலம் உணர்த்தி தான் விண்ணேற்பு அடைந்ததை தெரிவித்தார்.

ஆண்டுதோறும் புரட்டாதி 08ம் நாள் அன்னை மரியாவின் பிறப்பை உலகு மிக சிறப்பாய் கொண்டாடி மகிழ்கின்றது. வரலாற்றில் விவிலிய பக்கங்களில் மரியா பற்றிய ஆதார தகவல்கள் மிக சொற்பமே. அன்னை மரியா தன் தாழ்ச்சி என்ற பண்பினால் உலகிற்கு ஒரு மறைபொருளாகவே இருந்தார். நற்செய்தியாளர்கள் உட்பட எவருமே அன்னையின் முழுமை தன்மையை உலகிற்கு வெளிபடுத்த வில்லை. எனினும் மனித மீட்பு வரலாற்றில் அன்னையின் இடம் நிகரற்றதே. அன்னையின் பிறப்பையும் மேன்மையையும் திருமறை சாராத கி.பி 02ம் நூற்றாண்டு நூலான யாக்கோப்பின் முதல் நற்செய்தியே எடுத்துரைக்கிறது. இந்த நிகழ்வுகள் யாவும் புதிய ஏற்பாட்டில் விபரிக்கப்படாதவையே ஆயினும் இறை ஏவுதல் உடையது என யாக்கோபு நற்செய்தி நூல் அன்னையின் வாழ்வியலை சான்றுடன் எடுத்து கூறுகின்றது.

"நன்றி"

## அன்னை ஓர் அதிசயம்

ஈன்றெடுத்த அன்னை அவள்!
ஈடில்லா அன்பு அவள்!
ஆண்டவன் அளித்த அதிசய உறவு!
அன்பு என்னும் சொல்லுக்கு
அடையாளம் அவள்!
அள்ளி அள்ளி கொடுப்பாள்
அளவில்லா பாசத்தை!

அன்பின் உறைவிடமாம் அகிலத்தில்
சுகத்தின் இருப்பிடமாம் யாவருக்கும்
ஆறுதல் அடையுமிடம் நீயன்றோ ...

உணர்விழந்த உடலும் உயிர்பெறும்
கலங்கிய மனமும் தெளிவடையும்
அன்னை மடியை தஞ்சமடைந்தால் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## புனித பெரிய கிரகோரி

### ஆசிரியர்களின் பாதுகாவலர் - 03.09.2021



கிரகோரி உரோமையில் 540ஆம் ஆண்டு பிறந்தார். கிறிஸ்தவ வழிபாடுகளின் தந்தை என அழைக்கப் பட்டார். கார்டியானுஸ் மற்றும் சில்வியா ஆகியோரின் மகனாவார். அறிவியல், வரலாறு, கணிதம், இசை போன்ற துறையில் சிறந்தோங்கினார். இவர் துறவறம் மீது ஆர்வம் கொண்டு துறவற வாழ்வை மேற்கொண்டார். திருத்தந்தை இரண்டாம் பெலாஜியஸ் இவரை திருத்தொண்டராக உயர்த்தினார். திருத்தந்தை பெலாஜியஸின் மறைவுக்குப் பின் முதலாம் கிரகோரி என்ற பெயரில் திருத்தந்தையாக பொறுப்பேற்றார். "தொண்டருக்கெல்லாம் தொண்டராக" என்னும் வாக்கியத்தை முதலில் இவர்தான் பயன்படுத்தினார். 590 – 604 வரை திருத்தந்தையாகப் பணியாற்றிய இவர் 604 மார்ச் 12 அன்று இறந்தார். ✸

## புனித நீக்கிலஸ் டொலென்டினோ

### படகோட்டிகளின் பாதுகாவலர் - 10.09.2021



கம்பக்னோனுஸ் தே கருட்டி மற்றும் அமதா தே குய்தியானி தம்பதியர் வெகுகாலமாக குழந்தையின்றி இருந்தனர். அவர்கள் மிராவிலிருந்த புனித நீக்கிலஸ் ஆலயம் சென்று புனிதரிடம் செபித்தனர். புனிதரின் பரிந்துரையால் பிறந்த குழந்தைக்கு நீக்கிலஸ் எனும் பெயரையே சூட்டினர். 1246இல் பிறந்து அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்த நீக்கிலஸ் தனது 18வது வயதில் புனித அகுஸ்தினார் சபையில் சேர்ந்தார். தனது 25வது வயதில் குருவாக அருள்பொழிவு பெற்றார். இவர் தனது வாழ்நாளில் அன்னை மரியாள், புனித அகுஸ்தினார், புனித மொனிக்கா வானதூரின் திருக் காட்சிகளை கண்டவர் ஆவார். இறந்த 3 பேருக்கு உயிரளித்ததோடு 300க்கும் மேற்பட்ட புதுமை -களையும் செய்துள்ளார். 1306 செப்ரெட்பர் 10 அன்று இவர் இறைபதமடைந்தார். 1446 யூன் 05 அன்று திருத்தந்தை 4ம் யூஜின் அவர்களால் புனிதர் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. ✸

## புனித மத்தேயு

### *சுங்கத்துறையினரின் பாதுகாவலர் - 21.09.2021*



அல்பேயுவின் மகனான மத்தேயு இயேசுவை பின் தொடர்ந்த போது 31 வயதுடையவராய் இருந்தார். வரி வசூலிப்பராக உரோமையருக்கு பணிபுரிந்த காரணத்தினால் சமூகத்தில் வாழ்ந்த அனைத்து தரப்பினரின் இகழ்ச்சிக்கும் ஏளனத்திற்கும் ஆளாகி மிகுந்த மன வருத்தத்துடன் இருந்தார்.

"என்னை பின்பற்றி வா" என்ற இயேசுவின் அழைப்புக் கேட்டதும் மகிழ்ச்சியுடன் அவரைப் பின் தொடர்ந்தார். யூதேயா, பெர்சியா, எத்தியோப்பியா மற்றும் எகிப்து போன்ற பகுதியில் நற்செய்திப் பணியாற்றினார். இவர் இயேசுவின் பெயரால் அரசரின் இறந்த மகனுக்கு உயிரளித்தார். தொழுநோயால் துன்புற்ற இளவரசியைக் குணமாக்கினார். யூதர்களின் துன்புறுத்தல்களால் யூத கிறிஸ்தவர்கள் தளர்ச்சியுற்றிருந்த வேளையில் இயேசுதான் உண்மையான மெசியாவா? என்ற ஐயப்பாடு அவர்களது உள்ளத்தில் எழுந்தது. இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணும் விதமாக இயேசுதான் மெசியா என்றும் இறையாட்சியை நிறுவ வந்தவர் என்றும் அழுத்தமாக தமது நற்செய்தியின் மூலம் பறைசாற்றினார்.

90ஆம் ஆண்டு இவர் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த போது மத விரோதிகளால் வெளியில் இழுத்துச் செல்லப்பட்டு கல்லால் எறிந்து கொல்லப்பட்டார். ✸

## புனித பியோ

### தன்னார்வத் தொண்டர்களின் பாதுகாவலர் - 23.09.2021




செபியுங்கள், ஏனென்றால் அகில உலகமும் செபத்திற்காக ஏங்குகிறது என்று கூறிய தந்தை பியோ 1887 மே 25இல் க்ராசியோ ∴போர்ஜியோன் மற்றும் மரிய ஜியுசப்பா தே நுன்சியோ ஆகியோரின் மகனாவார். இவரது இயற்பெயர் ∴பிரான்செஸ்கா ∴போர்ஜியோனே ஆகும்.தமது 16வது வயதில் 1903 ஜனவரி 06 அன்று கப்புச்சின் சபையில் நவதுறவியாக சேர்ந்தார். ஜனவரி 22இல் பிரான்சிஸ்கன் சபைத் துறவியாக உடை அணிந்தார். அன்று தமது பெயரை பியோ என்று மாற்றிக்கொண்டார்.

இயேசுவின் உடலில் உள்ள ஐந்து காயங்களைப் போன்று தமது உடலிலும் ஐந்து காயங்களை வரமாகப் பெற்று வேதனையுடன் 50 ஆண்டுகள் வாழ்ந்து 1968.09.23இல் இறந்தார். "புத்தகத்தில் நாம் கடவுளைத் தேடுகிறோம், செபத்தில் அவரைக் கண்டுகொள்கிறோம். செபமே இறைவனின் இதயத்தைத் திறக்கும் திறவுகோல்" என்றார். "தந்தை" என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட தந்தை பியோவை 1999 மே இரண்டு அன்று அருளாளராக அறிவித்த திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 2002, ஜூன் 16இல் புனிதராக உயர்த்தினார். ✸

## புனித வின்சென்ட் டி போல்

### இரக்கச் செயல்களின் பாதுகாவலர் 24.09.2021




பிரான்ஸ் நாட்டில் டாக்ஸ் நகருக்கு அருகில் உள்ள காஸ்கனி கிராமத்தில் 1581, ஏப்ரல் 24 அன்று பிறந்தவர் வின்சென்ட் டி போல். ஜீன் தே போல் மற்றும் பெர்ட்டிராண்ட் தே மொராஸ் ஆகியோரின் ஆறு பிள்ளைகளுள் இவர் ஒருவர். கால் ஊனமுற்ற ஏழை விவசாயியான தந்தை கஷ்டப்பட்டு உழைப்பதைக் கண்ட வின்சென்ட் தானும் ஆடு மேய்க்கச் சென்றார். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர் படிக்க விருப்பம் கொண்டு பங்குத்தந்தையை அணுகினார். அவரது உதவியுடன் டாஸ்க் நகரில் இருந்த பிரான்சிஸ்கன் சபையினர் நடத்திய பள்ளியில் சேர்ந்தார். ஒழுக்கமும் அறிவும் இரு கண்களென வளர்ந்தார். இவரது அறிவுத்திறன் மற்றும் நற்பண்புகளை அறிந்த நீதிபதி கோமத் இறைபணியாளர் ஆகுமாறு வின்சென்டிடம் பேசினார். வின்சென்ட்டும் இறை அழைப்பை ஏற்றார். இறையியல் பயின்று 1600.09.30 அன்று தமது 20 வது வயதில் அருள்பொழிவு பெற்றார். கடல் கொள்ளையர்களிடம் மாட்டிக்கொண்டு பல தடவைகள் அடிமையாக விற்கப்பட்டார். அங்கிருந்து தப்பித்த வின்சென்ட் திருத்தந்தையின் பரிந்துரையின் நிமித்தம் அரசர் நான்காம் ஹென்றியின் அரசவையில் அரசியின் ஆன்ம ஆலோசகராக இருந்தார். ஹென்றியின் மறைவுக்குப் பின் கிளிச் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார்.

"பெரும் போரில் வெற்றி பெற்றதால் ஏற்படும் மகிழ்ச்சியைவிட சிலுவையைக் கழுத்தில் அணிந்து ஏழை மக்களுக்கு சேவை செய்வது மிகுந்த மகிழ்ச்சியை எனக்குத் தருகிறது. என்றார். தமது போதனைகளால் பலரை மனம் மாற்றினார், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். தேவையில் இருக்கும் எல்லோருக்கும் உதவி செய்யவும் ஒப்புரவு அருட்சாதனம் கேட்கவும் 1625.04.17 அன்று "நற்செய்தி அறிவிப்புக் குழவை" உருவாக்கினார். பொதுவாக இவர்கள் வின்செந்தியர்கள் என அழைக்கப்படுவதுண்டு. இவரால் உருவாக்கப்பட்ட ஏனைய சபைகள், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் பணியாற்ற "அறப்பணி மகளிர் சபை", பெண்கள் தங்கள் குலப் பெருமைகளை விட்டு ஏழைகளுக்காக உழைக்க ''அறப்பணிகளின் சகோதரிகள்" ஏழைகளுக்கு முழுநேரமும் உழைக்க ''ஏழைகளின் பணியாளர்கள் சபை" என்ற அருட்சகோதரிகள் சபையை ஏற்படுத்தினார். இறைவன் தன்னை அழைத்ததும் 1660.09.27 அன்று அவருடன் சென்றார். இவருடைய உடல் இன்று வரை அழியாமல் உள்ளது. 1729.08.13இல் அருளாளராகவும், 1737.06.16 அன்று புனிதராகவும் திருத்தந்தை 13ம் ஆசீர்வாதப்பரால் உயர்த்தப்பட்டார். ✸

## அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் 29.09.2021




**மிக்கேல்** :- (''கடவுளுக்கு நிகர் யார்") திருவிவிலியத்தில் புனித மிக்கேல் பற்றிய குறிப்புகள் நான்கு. 01. அலகைக்கு எதிராகப் போரிடுகிறார். 02. விசுவாசிகளின் ஆன்மாவைத் தீய சக்திகளிடம் இருந்து குறிப்பாக இறக்கும் நேரத்தில் பாதுகாக்கிறார். 03. பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்கும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுக்கும் பாதுகாவலராக இருந்த புனித மிக்கேல் இன்று திருச்சபையின் பாதுகாவலராக இருக்கிறார். 04. இறந்த மனிதர்களின் ஆன்மாவை இறுதித் தீர்வைக்கு உட்படுத்துகிறார். இவர் அனைத்து மலைப்பகுதிகளுக்கு பாதுகாவலராகவும், திருத்தந்தையர்களின் காவல் தூதராகவும் இருக்கிறார்.

**கபிரியேல்** :- (''கடவுளின் ஆற்றல்") தானியேல் புத்தகம் அதிகாரம் 10இல் குறிப்பிடப்படும் இவர் திருமுழுக்கு யோவானின் பிறப்புக் குறித்து முன்னறிவித்தவரும், கன்னி மரியாள் இயேசுவை கருத்தாங்கிய போது பிரசன்னமாகியவரும், இயேசு ஒலிவ மலையில் மன்றாடிய போது தோன்றி அவரை வலுப்படுத்தியவரும் இவரே.

**இரபேல்** :- (''கடவுள் குணமாக்குகிறார்") தோபித்தின் மகன் தோபியா மேதியா நாட்டில் உள்ள கபிரியின் மகன் கபேலிடம் செல்ல ஆயத்தமானார் (தோபி.4:40). அவரைத் தனியே அனுப்ப அஞ்சிய தோபித்து துணையாளர் ஒருவரைக் கண்டுபிடிக்குமாறு கூறுகிறார். அப்போது தன்னை மறைத்துக் கொண்டு மனித உருவிலே இரபேல் முன்செல்கிறார். தோபித்திடம் தான் பெரிய அனனியாவின் மகன் அசரியா என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார். பத்திரமாக வீடு திரும்பியவுடன் தோபித்திடம் தான் இரபேல். ஆண்டவருடைய மாட்சிமிகு திருமுன் பணிபுரியும் ஏழு வானதூதர்களுள் ஒருவர் எனக் கூறி தன்னை வெளிப்படுத்துகிறார். ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிய யூபிலி ஆண்டு கட்டுரை

# அன்பும், நட்பும் இணைந்ததே அன்பியம்

கி. அருளப்பு, விடத்தல்தீவு.

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய எம் பயணப் பாதையில் அன்னையாம் திருஅவை இவ்வாண்டை அன்பிய ஆண்டாக கடைப்பிடிக்க எம் ஒவ்வொருவரையும் அன்புச் சமூகமாக அழைத்திருக்கின்றது. உறவும் நட்பும் இணைந்ததே அன்பியம்! கிறிஸ்தவம் என்பது மறைத்து வைப்பதற்கல்ல? அது மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு உரியது. உண்மையை என்றும் மறைத்து வைக்க முடியாது! உண்மையின் முழு வடிவம் தான் கிறிஸ்தவம்! ஒளி வழிகாட்டுவதற்குரியது. கடலில் தத்தளிக்கும் கப்பலுக்கு கரையை காட்டும் கலங்கரை விளக்கு கிறிஸ்தவம்! அந்தக் கலங்கரை விளக்குத் தூண்கள்தான் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும்! நாம். எந்த அளவுக்கு உயர்ந்து நிற்கின்றோமோ அந்த அளவிற்கு ஆன்மாக்களை மனம் திருப்ப முடியும்! நாம் கொண்டிருக்கும் ஒளியைப் பார்த்து, நாம் வாழும் வழியைப் பார்த்து உலகம் முழுவதும் எம் மீட்பைக் கண்டுகொள்ள பிற இனத்தாருக்கு ஒளியாக நான் உங்களை ஏற்படுத்துவேன் என்று ஆண்டவர் இயேசு புனித பவுலுக்கும் பர்னபாவுக்கும் கூறியுள்ளார்! என்பதனை திருத்தூதர்பணி – 13.47-48 விபரிக்கின்றது.

இன்றைக்கு நாம் ஒவ்வொருவரும் புனித பவுலாகவும், பர்னபாவாகவும் மாற அழைக்கப்படுகின்றோம். நீங்கள் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் வாழ அழைக்கப்படுகின்றீர்கள். மத்தேயு-5.13-16 இதை விபரிக்கின்றது.

நற்செய்தியின் படிப்பினைகள் தான் எம்முடைய ஆன்மீக உணவு. இந்த உணவை பிறரும் உண்பதற்கு தேவைப்படும் உப்புதான் எம் வாழ்வின் எடுத்துக்காட்டுகள். வார்த்தைக்கு, போதனைக்கு எம்முடைய வாழ்க்கையால் சுவையூட்ட வேண்டும். எம்முடைய வாழ்க்கையைப் பார்ப்பவர்களே எம் வார்த்தையால் கவரப்படுகின்றார்கள். நீங்களும் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மகிமை என்கின்றது. இறைவார்த்தை கனி என்ற சொல் பகிர்வைக் குறிக்கின்றது.

இக்கனியே முதல் பகிர்வு. இறைவார்த்தையை மற்றவர்



களுக்கு அறிவிப்பது. அன்று தான் சீடர்களுக்கெல்லாம் அறிவுரை கூறவெண்ணி குன்றின் மேல் ஏறி நின்று கொடைக்கரம் விரித்து நீட்டி ஒன்று இரண்டு என்று சொல்லி உள்ளதை எண்ணி வைத்து மண்ணினில் தொடக்கி வைத்தார் மாரிபோல் யேசுநாதர். எளிய மனத்தோர் பேறுப்பெற்றோர் என்று எடுத்தும் அவர் சொன்னார். இதில் எளிமை என்பது பற்றில்லாமை இறைவனை நம்புவதே! வளமிகு செல்வம். மனையாள் சொந்தம் வரவினை என்றது. ஒரு வஞ்சம் இல்லா நெஞ்சத்தோடு பிறர் பழி சொல்லாது. விளம்பிய வேதம் வகுத்தது போலே வாழ்பவர் இவராவர். அந்த விண்ணர சென்றும் இவருக்குரியது. அடைபவர் இவராவர்.

இறைவார்த்தை தான் அன்பியங்களின் ஊற்று. நற்கருணையும் திருவிலியமும் அன்பியங்களின் உயிர் துடிப்புகளாகும். ஏனெனில் இவை இரண்டிலிருந்து தான் அன்பியங்கள் தங்கள் வாழ்வின் ஆதாரங்களையும் ஆற்றலையும் பெறுகின்றன. எனவே தான் அன்பியங்களுக்கு நற்கருணை சமூகம் என்று இன்னுமொரு பெயரும் உண்டு. ஆகவேதான் அன்பியம் நற்செய்தி வாழ்க்கை சமூகம் என்று அழைக்கப்படுகின்றது. நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மகிமை என்கின்றார் ஆண்டவர் இயேசு. பகிர்வில் முதல் கனியாக இருப்பது நற்செய்தி அறிவிப்பு. இதுவே சிறந்த கனி மண்ணகப் பொருளில் மகத்துவம் இல்லை. விண்ணகசெல்வம் வீழ்வதும் இல்லை. உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ அங்கே உங்கள் மனமும் உள்ளது. இரண்டு குதிரையில் ஏறிட முடியுமா? இருவருக்கு உங்கள் ஊழியம் நடக்குமா? செல்வம் ஒரு புறம். கடவுள் ஒரு புறம். செல்வம் தேர்ந்தால் தீராத்தூயராம் கடவுளை தேர்ந்தால் தினமும் நிம்மதி. அன்பிலார் எல்லாம் தமக்குரியர். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. இது பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர் கூறியது. பிறவிப் பெருங்கடல் நீந்துவர். நீந்தாதார் இறைவனடி சேராதார்! கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் அவரை மேற்கோள் காட்டிகூறிய இறைவார்த்தை இவை. இதயம் இல்லா உலகில் இதயமே சமயம். சிந்திப்போம் செயற்படுவோம்.●

# தொண்டின் சிகரம் அன்பின் வழிகாட்டி ஏழைகளின் தாய் அன்னை திரேசா



அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்தியக் குடியுரிமைபெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தருவாயில் இருப்போருக்கும் தொண்டாற்றியவர் இவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார்.

1970 ஆம் ஆண்டுக்குள் இவர் சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார். இதற்கு மேல்கம் முக்கெரிட்ஜ் என்பவரின் சம்திங் பியுடிபுல் ஃபார் காட் என்ற ஆவணப்படம் ஒரு முக்கிய காரணமாகும். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரதரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக் கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை அடங்கும்.

பல்வேறு நபர்கள், அரசுகள் மற்றும் அமைப்புகளெனப் பலர் இவரைப் புகழ்ந்து வந்தாலும், பலவிதமான விமர்சனங்களையும் இவர் சந்தித்தார். இத்தகைய விமர்சனங்கள் கிறித்தபர் ஃகிச்சின்சு, மைக்கேல் பேரன்டி, அரூப் சட்டர்ஜி போன்ற நபர்களாலும் விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகளாலும் சாட்டப்பட்டது. இவர்கள் அன்னை தெரேசாவின் உறுதியான கருக்கலைப்பு எதிர்ப்பு நிலையையும், ஏழ்மை தரும் ஆன்மீக மேன்மையின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையையும், இறப்பின் வாயிலிலிருப்போருக்குஅவர் ஞானஸ்நானம் அளிக்கிறார் எனவும் குற்றம் சாட்டினர். சில செய்தி ஊடகங்கள் அவரது நல்வாழ்வு மையங்களின் மருத்துவ வசதித் தரத்தைப் பற்றி விமர்சிப்பனவாகவும், நன்கொடைப் பணம் செலவு செய்யப்படுவதின் விதத்தைப் பற்றிக் கவலை எழுப்பியும் செய்திகளை வெளியிட்டன.

இவரின் இறப்புக்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திப்பேறு அடைந்தவராக அறிவிக்கப் -பட்டு கொல்கத்தாவின் அருளாளர் அன்னை தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார். 4 செப்ரெம்பர் 2016 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்பட்டார்.●

# அன்னை திரேசாவின் —பொன்மொழிகள்—

❖ புன்னகையே அன்பின் சின்னம்...
அதுவே நாம் பிறருக்குக் கொடுக்கும் அழகிய பரிசு...

❖ இறக்கத்தான் பிறந்தோம்
அதுவரை இரக்கத்தோடு இருப்போம்.

❖ வெறுப்பது யாராக இருந்தாலும்.
நேசிப்பது நீங்களாக இருங்கள்...

❖ இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட
ஒரு கை நீட்டி உதவி செய்
இரு கை உன்னை வணங்கும் கடவுளாக

❖ உன்மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி.
உன்மீது கோபம் கொண்டவர்களை
அதைவிட அதிகமாக நேசி

❖ கண்ணுக்குத் தெரிந்த மனிதனை மதிக்காவிட்டால்..
கண்ணுக்குத் தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை...

❖ கருவுற்றால் ஒரு குழந்தைக்கு மட்டும் தான்
அன்னையாக முடியும்,
கருணையுற்றால் ஆயிரம் குழந்தைகளுக்கு கூட
அன்னையாக முடியும்.

❖ எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில்
உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்.?
கவலையை விடுங்கள். வாழ்க்கையை முதலில்
வாழத் தொடங்குங்கள்.

❖ தண்டனை கொடுப்பதற்குத் தாமதம் செய். ஆனால்,
மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே.


மன்னா வாசகர்களே!

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிற்ராஸ்-வாழ்வுதயம் கடந்த காலா

# மேற்கொண்ட மனி

1. பணிகள் தொடர்பான சுருக்கம்

கறிற்ராஸ்-வாழ்வுதயம் தற்கால அசாதாரண COVID19 சூழ்நிலைகள் மத்தியிலும் மன்னார் மறைமாவட்டத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி, தனது மனித நேயப்பணிகள் ஊடாக, நலிவுற்ற மக்களின் வாழ்வை வளப்படுத்தி வருவ - துடன், சமூக, பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் போன்ற துறைகளிலும் மக்களின் வாழ்வை வலுவூட்டி வருகின்றது.

40 Caritas Valvuthayam 1961 - 2021 40th Anniversary

குறிப்பாக மக்களின் தேவை எங்கு உள்ளதோ அங்கு தேடிச் சென்று தனது பணிகளை துணிகரமாக, இறைவன் துணையோடு ஆற்றி வருகின்றது. இப்பணிகள் பதினொரு செயற்பாட்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றன. சமகாலத்தில் நிதி வழங்கும் நிறுவனங்களின் நிதி மூலங்கள் மட்டுப்படுத்தப்பட்டும், தனது விடாமுயற்சியின் பயனாக நிதியாளர்களை மிகவும் வினயமாகத் தேடி அலைந்தே திட்டங்களை வருவித்து, மக்களுக்கு பணிகளை ஆற்றி வருகின்றது. இப்பணிகளானது சமகாலத்தில் அரசின் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்து செயலாற்றுவதோடு இதற்கான விசேட அனுமதிகளை பெற்று தொலைநகல் வலையமைப்புக்களின் பொறிமுறைகளை கைக்கொண்டு பணியாளர்கள் குறிக்கப்பட்ட இலக்கு கிராமங்களின் சமூக மட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்போடு திட்டங்களை இடைநிறுத்தாமல் கறிற்ராஸ் - வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி. செ.அன்ரன் அடிகளாரின் சிறப்பான வழிகாட்டலில் இயங்கி வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

2. கறிற்ராஸ்-வாழ்வுதய உதவிக்கரப் பிரிவின் செயற்பாடுகள்



வாழ்வுதய உதவிக்கரப் பிரிவானது தனது மனிதநேய பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக இக்காலாண்டில் நாட்டில் ஏற்பட்ட COVID19 சூழ்நிலைகள் மத்தியில் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்ட இக்காலத்தில் உதவிக்கரப் பிரிவின் பயனாளிகள் பயணத்தடை காரணமாக தமது அவயவங்களுக்கான திருத்த வேலைகளை உரிய நேரத்தில் செய்வதற்கு மிகவும் சிரமப்பட்டதை காணக் கூடியதாக இருந்தாலும் எமது ஸ்தாபனத்தின் நடமாடும் சேவைகள் மூலமாகவும் ஓரளவுக்கேனும் பயனாளிகளுக்கு உதவக் கூடியவாறு அமைந்தது. குறிப்பாக Prosthetic Services, Orthotic Services, Patient follow up, Other Assistive devices, Physiotherapy Services போன்ற பணிகளை ஆற்றக்கூடியவாறு அமைந்தது.

3. ஒருங்கிணைந்த முழு மனித அபிவிருத்தி செயற்றிட்டம்

இத்திட்டத்தின் மூலம் கிராம மட்ட சிறு குழுக்களை உருவாக்கி அவர்களுக்கான சமூக பொருளாதார கலைகலாச்சார அரசியல்



விழிப்பூட்டல்களை வழங்கி அவ் இலக்கு மக்களை புதுப் பொலிவுடன் புதிய சிந்தனையில் தமது குடும்ப சமூக வாழ்வினை மேம்பட வைப்பதுவும், தமது சொந்த பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ கற்றுக்கொடுப்பதும், தமது கிராமத்தின் அடிப்படை தேவைகளை அவர்களாகவே முன்னின்று பெற வைப்பதும் முக்கிய விடயமாகக்கொண்டு செயற்படுகின்றது. அத்தோடு தமது கிராமத்தின் ஒவ்வொரு தேவைகளுக்கும் ஒருமித்த குரலில் குரல்கொடுப்பதற்கான விழிப்பூட்டல்களை நிதி முகாமைத்துவம், தலைமைத்துவ பயிற்சிகள், முரண்பாடுகளை களைதல் தொடர்பான பயிற்சிகள் போன்றவைகளும் தரமான வளவாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இக் காலாண்டின் யூலை மாதத்துடன் இச்செயற்பாட்டின் இரண்டாவது ஆண்டு நிறைவடைந்து இத்திட்டத்தின் மூன்றாவது இறுதி ஆண்டு செயற்பாடுகள் கறிற்ராஸ் - இலங்கை (SEDEC) இன் திட்ட விளக்கவுரைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தினை சமகால COVID-19 சூழ்நிலைகளில் இலகுவாக மேற்கொள்வதற்கு ஏதுவாக கறிற்ராஸ் - வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. செ.அன்ரன் அடிகளாரின் தொலைநோக்கு சிந்தனைக்கு ஒப்பாக ஒவ்வொரு இலக்கு கிராமங்களிலுமிருந்து பணியாற்றுவதற்காக தொண்டு பணியாளர்கள் 8 பேர் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இத்திட்டிற்கான நிதி உதவியினை கறிற்ராஸ் - கொரியா நாடு வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

4. COVID19 சூழ்நிலைகள் மத்தியிலும் எமது கல்விக்கு தொடர்ந்து உரம் இடுகின்றது கறிற்ராஸ் - வாழ்வுதயம் என்கிறார்கள் பயன்பெறும் மாணவர்கள்.

அண்மையில் Zoom வலையமைப்பூடாக பயன்பெறும் மாணவர்களுடன் நிதியாளர்கள் மேற்கொண்ட கலந்தரையாடலில் பயன்பெறும் மாணவர்கள் மேற்கண்டவாறு கூறினர். அவர்கள் மேலும் கூறுகையில் கறிற்ராஸ்-வாழ்வுதயம் எமது கல்வி மற்றும் ஆளுமைகொண்ட எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகின்றது எனவும் எந்த சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் நாம் எமது கல்வியை தொடருவோம் எனவும் நன்றி உணர்வுடன் நிதியாளர்களுக்கு தெரியப்படுத்தினர். தற்போது இத்திட்டத்தின் ஊடாக பயன்பெறும் மாணவர்களுக்கு



இவ் அசாதாரண சூழ்நிலைகள் மத்தியிலும் அவர்களது online கல்விக்காக தொடர் ஊக்குவிப்பு பணம் வங்கி மூலமாகவும் நேரடியாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. மன்னார் மறைமாவட்டத்தில் உள்ளடங்கும் வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் 89 தாய் தந்தையை இழந்த வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை பதிதாக இனம்கண்டு அவர்களுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இக்கல்விப் பிரிவு செயற்பாடுகளில் 70 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த பணக் கொடுப்பனவுகளும் மேலும் அரையாண்டுக்கு ஒரு தடவைக்கான பணக்கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமல்லாது 165 முன்பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு அதில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பள ஊக்குவிப்பும், பாடசாலையில் தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றும் 2 ஆசிரியர்களுக்குமான மாதாந்த சம்பள ஊக்குவிப்பும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

5. நிலையான அபிவிருத்தி செயற்றிட்டம்



மடு பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற 20 இலக்கு கிராமங்களிலுள்ள 1560 குடும்பங்களையும் அவர்களது வாழ்க்கை நிலைகளில் சாதகமான சமூக பொருளாதார கலாச்சார, அரசியல் சூழலில் சாதகமான புதுப்பித்தல் மாற்றத்தை ஏற்படுத்தி சுய பலத்தில் நம்பிக்கை கொண்ட சமூகத்தை உருவாக்குவதன் மூலம் கிராமத்தில் சிறந்த எடுத்துக்காட்டான மக்கள் அமைப்பாக மாறுவதற்கான வலுவூட்டல் செயற்பாடுகளை முன்னெடுப்பதே நோக்கமாக உள்ளது. இதன் மூலம் இவர்கள் எதிர்காலத்தில் தமது சமூக பொருளாதார வாழ்வினை சிறப்பாக முன்னெடுப்பதற்காக இம்மக்களுக்கு தரமான வளவாளர்கள் ஊடாக கருத்தமர்வுகள், பயிற்சி பட்டறைகள், ஒன்றுகூடல்கள் போன்றவற்றை நடாத்தப்பட்டு வருகின்றது. தற்போது உள்ள அசாதாரண சூழ்நிலையில் அக்கிராமங்களிலுள்ள தொண்டு பணியாளர்களின் உதவியோடு சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம் COVID19 விழிப்பணர்வுகளும் வழங்கப்படுகின்றன.

6. இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய புலம்பெயர் மக்களுக்கான உதவித்திட்டம்

கடந்த யுத்த காலத்தில் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்று மீளவும் தமது நாட்டுக்கு திரும்பிய மக்களுக்கு கறிற்ராஸ் - வாழ்வுதயமானது கறிற்ராஸ் - கொரியாவின் நிதி உதவியுடன் தற்காலிக வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தில் கடந்த காலாண்டில் 125,000.00 ரூபா பெறுமதியான 15 தற்காலிக வீடுகளும் ரூபா 75,000.00 பெறுமதியான வாழ்வாதார உதவிக்



கொடுப்பனவில் 30 குடும்பங்களும் பயன்பெற்றுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாண்டில் (வைகாசி- ஆவணி 2021)
# ித நேயப்பணிகள்

7. நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கல்

மேற்படி திட்டத்தில் முசலி முள்ளிக்குளம் கிராமத்தில் 20 நிரந்தர வீடுகளும் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய மக்களுக்காக 30 நிரந்தர வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் இதுவரையிலும் முள்ளிக்குளத்தில் 20



வீடுகளும் பூரணப்பபடுத்தப்பட்டுள்ளதுடன் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய மக்களுக்கான 30 நிரந்தர வீடுகள் அமைக்கும் பணியில் 24 வீடுகளுக்கான பணிகள் 75% வீதம் முடிவடைந்தள்ளன. அத்தோடு முசலி கொக்குபடையான் கிராமத்தில் வாழ்வாதார உதவிக்காக 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 75.000.00 பெறுமதியான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**8. Kinder mission** செயற்றிட்டம்



இத்திட்டமானது கறிற்ராஸ் இலங்கையின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்றது. இதில் விசேட தேவையுள்ள பிள்ளைகளை மேலும் இனம்கண்டு அவர்களின் வாழ்வு புதுப்பொலிவுடன் மலர்வதற்கு அவர்களுக்கான விசேட வகுப்புக்கள், வலுவூட்டல் பயிற்சிகள், சுயதொழில் பயிற்சிகள் போன்றவைகள் கடந்த மாதங்களில் முன்னெடுக்கப்பட்டு உள்ளது. மேற்படி இப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கான உளவள ஆற்றுப்படுத்தல் பணிகளும் இடம்பெற்று வருவதோடு. தற்கால Covid19 சூழ்நிலையில் தனிப்பட்ட ரீதியாக தொண்டு பணியாளர்கள் மூலமாக இல்லங்களை சந்தித்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பிள்ளைகளின் விசேட கல்விக்கான ஊக்குவிப்பினை வழங்குவதோடு இவர்களின் பெற்றோர்களுடன் தொலைபேசி மற்றும் Whatsapp மூலமாகவும் தொடர்புகொண்டு பிள்ளைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக அறியப்படுகின்றதும் குறிப்பிடத்தக்கது.

9. நிலையான சமாதானத்தினை ஏற்படுத்தலும் தேசிய ரீதியில் பயணித்தலும்

மேற்படி செயற்பாடானது மன்னார் மறைமாவட்டத்தில் கிராம மட்ட விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் இக்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு 'முரண்பாடுகளை களைந்து அன்புறவோடு இணைவோம்' என்கின்ற சிந்தனையை மையமாக வைத்து மனித மாண்பினை வளர்த்தல் தொடர்பான பயிற்சிக் கருத்தமர்வுகள் கடந்த காலண்டில் இதன் இலக்கு கிராமங்களில் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் மதவேறுபாடற்ற சிரமதான நிகழ்வுகளும், ஒன்றுகூடல்களும் நடைபெற்றுள்ளதோடு அரச உத்தியோகத்தர்



களை ஒன்றிணைத்து குடும்ப வன்முறை, சிறுவர் துஸ்பிரயோகம், இளைஞர்களை மேம்படுத்ததுவதற்கான கலந்துரையாடல் போன்றவைகளும் அத்தோடு சிறுவர் மட்டத்தில் சமாதானத்தினையும் நல்லுறவினையும் கட்டி எழுப்பவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

10. தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் இளைஞர்களின் வாழ்வினை புதுப்பித்தல்



கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் கணினிப்பிரிவு மூலம் கல்வி கற்று மேலதிக கல்விக்காக காத்து இருப்பவர்களுக்கும், கல்வியினை நிறுத்தி இடைவிலகிய இளைஞர்களுக்கும் கணனி தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கி வருகின்றது இம்மாணவர்கள் இப்பயிற்சியினை பூர்த்தி செய்த பின்னர் அரச அங்கீகாரம் பெற்ற NVQ 3 level சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இப்யிற்சியானது மூன்றுமாத பயிற்சியாக அமைகின்றது. கடந்த காலாண்டில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பயன்பெற்று சான்றிதழ்களும் பெற்றுள்ளதோடு இதுவரை NVQ3 தர சான்றிதழகளை 100 ற்கும் மேற்பட்டவர்கள் பெற்றுள்ளனர். அத்தோடு சமகால அரச ஊரடங்கு காலங்களில் மட்டும் இவ்வகுப்புக்கள் நடாத்தப்படுவதில்லை என்பதும் குறிப்படத்தக்கது.

11. உணவுப்பாதுகாப்பு செயற்றிட்டம்.

மேற்படி உணவுப் பாதுகாப்பு திட்டம் கொண்டுவரப்பட்டதன்



நோக்கமானது மக்கள் இரசாயன கிருமி நாசினிகளை பயன்படுத்தியே தமது விவசாயம், வீட்டுத்தோட்டம், போன்றவற்றினை மேற்கொண்டு வருகின்றனர். இதிலிருந்து மக்களை மீளவும் பழமையான முறைகளான இயற்கை பசளைகளை பயன்படுத்திய விவசாய முயற்சிகளில் ஈடுபட வைப்பதற்கான புதிய முயற்சியாக இத்திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது இதற்காக இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படும் இலக்கு கிராமங்களுக்கான பல வலுவூட்டல் பயிற்சிகள், பட்டறைகள், செய்முறை பயிற்சிகள், அரச திணைக்களங்களுடன் இணைந்து தரமான வளவாளர்களை உள்வாங்கி செயற்படுத்தபட்டுள்ளன. இதனை நோக்குமிடத்து இத்திட்டமானது சமகாலதிற்கு மிகவும்பொருத்தமான திட்டமாகவும் விவசாய சமூகத்தினை புதிய வழிகாட்டலுடன் கொண்டு செல்லும் திட்டமாகவும் உள்ளது. மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள இலக்கு கிராமங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு இலக்கு கிராம மக்களுக்கு இலவசமாக தரமான விதைகள், மரக்கன்றுகள் போன்றவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**12. COVID19** விழிப்பூட்டல் மற்றும் நிவாரண உதவித்திட்டம்.



சமகால **COVID19** தாக்கமானது எமது நாடு பூராக பரவிக்கொண்டு வரும் இக்காலப்பகுதியில் மக்கள் இதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான விழிப்பூட்டல்களை கிராமந்தோறும் பொது சுகாதார உத்தியோகத்தர்களின் உதவிகளோடு மக்களுக்கான விழிப்பூட்டல்களை வழங்கி வருகின்றது. இது மட்டுமல்லாது இதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான முகக் கவசம் சுத்திகரிப்பு மருத்துவப்பொருட்கள் போன்றவைகள் வழங்கப்படுவதோடு அவசியமான தேவையிலுள்ள மக்களை இனம்கண்டு பங்குபணிமனைகள் ஊடாக அவசர நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு
திரு. சு.அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)
திட்ட இணைப்பாளர், கறிற்ராஸ்-வாழ்வுதயம்,
மன்னார்.

## மன்னிப்பு

மன்னிப்பதென்பது நீ எதிரிக்கு போடும்
பிச்சையல்ல, மாறாக நீ உன்னை
முழுமையாக குணப்படுத்தி, நீ
இழந்துபோன மகிழ்ச்சி மற்றும்
மனநிம்மதியை மீண்டும் பெற்றெடுக்க
நீ செய்யும் ஒரு முயற்சியாகும்.
மன்னித்தால் மன்னிக்கப்படுவீர்கள்
என்று இயேசு சொன்னதை நாங்கள்
எம் வாழ்வாக்கிட மன நிம்மதியோடு
வாழம்போது இறைவனின் இரக்கம்
எந்நேரமும் எம்மை சூழ்ந்திருக்கும்
என்பதை நாங்கள் மறந்து
விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பக்கம்

# “மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு”

அருட்கலாநிதி அ. கிறிஸ்ரீ றூபன் பெர்னான்டோ.
இயக்குனர், புனித யோசே வாஸ் இறையியல் கல்லூரி.
இயக்குனர், மன்னார் மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக்குழு.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இந்த 2021ம் ஆண்டானது புனித யோசேப்பின் சிறப்பு யூபிலிஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கின்ற போது, இந்த ஆண்டிலே புனித யோசேப்பின் மகத்துவத்தை வெளிக்காட்டும் நோக்குடன் அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ அவர்களால் புனித யோசேப்பின் சிறப்பு ஆண்டையொட்டிய நூலாக “மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு” என்ற நூலானது எழுதப்பட்டு 24.07.2021 அன்று மடுத்தியான இல்லத்திலே, பேரன்பிற்கும் அதிவந்தனைக்குமுரிய ஆயர்களான கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னான்டோ மன்னார் மறைமாவட்ட ஆயர், கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை திருகோணமலை மறைமாவட்ட ஆயர், பெருமதிப்பிற்குரிய திருமதி ஸ்ரான்லி டிமெல் லெம்பேட் மன்னார் மாவட்ட அரச அதிபர், யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய ஜெபரெட்ணம் அடிகளார், மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய கிறிஸ்துநாயகம் அடிகளார், புனித டிலாசால் இல்ல அதிபர் மதிப்பிற்குரிய அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ், மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் சிறப்பு பணிக் குருக்களான அருட்பணியாளர்கள் எமிலியானுஸ்பிள்ளை மற்றும் தேவராஜா கொடுதோர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட பிரமுகர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பலரின் பிரசன்னத்தின் முன்பாக, புனித யோசேப்பு சிறப்பு யூபிலி ஆண்டிற்கான அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ அவர்களால் எழுதப்பட்ட “மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு” என்ற நூலானது வெளியிடப்பட்டது. புனித யோசேப்பின் இந்த சிறப்பு யூபிலி ஆண்டிற்கான நூலில் காணப்படும் ஆக்கங்களை மன்னா பத்திரிக்கையிலே எதிர்வருகின்ற ஒவ்வொரு இதழிலும் வெளிக்கொணர இந்நூலின் ஆசிரியரோடு ஒப்புதல் செய்யப் -பட்டு ஆக்கங்கள் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படவுள்ளது.

**ஆசிரியர் அவர்களால் இந்த நூலிற்கான முன்னுரை:**

“மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, புனித யோசேப்பைப் பற்றி திருவிவிலியமும் (Sacred Scripture), திருவிவிலியப் புறநூல்களும் (Apocryphal Writings), திருஅவைப் பாரம்பரியங்களும் (Traditions of the Holy Mother Church), ஒரு நல்ல தந்தையாய் அவரின் மேலோங்கிய எடுத்துக் காட்டான வாழ்வின் தார்ப்பரியங்களும் (Exemplary Life), திருத்தந்தையர்களின் திருத்தூது அறிவுரைகளும் (Apostolic Encyclicals & Papal Exhortations) மிகவும் தெளிவாக எடுத்துரைப்பதை இந்நூலானது ஒட்டுமொத்தமாக வெளிக்கொணர முற்படுகின்றது. புனித யோசேப்பில் விளங்கிய நல்ல தந்தைக்குரிய பண்புகள் எந்தளவிற்கு இறைவனின் மீட்புத் திட்டத்தில் அவரது பங்களிப்பினை நல்கின என்பதை இந்நூல் தொடக்கமுதல் இறுதிவரை வெளிப்படுத்த முனைகின்றது.

**இந்நூலின் வழிமுறை (Methodology):**

இந்நூலின் வழிமுறை (Methodology) ஆக்கமானது 'மூல விமர்சனம்' (Source Criticism) என்னும் 'இறையியல் பகுப்பாய்வு முறையினை' (Theological Analytical Method) க் கைக்கொண்டு, மீட்புத் திட்டத்திலே புனித யோசேப்பு ஒரு நல்ல தந்தையாக எவ்வாறு திகழ்ந்தார் என்பது பற்றி இங்கே 'இறையில் பகுப்பாய்வு' (Theological Analysis) செய்யப்படுகின்றது. இந்த 'மூல விமர்சன ஆய்வுமுறைக்கு' (Source Criticism) துணையாக 'வரலாற்று விமர்சனப் பகுப்பாய்வு முறைமை' (Historical Critical Method) ன் கூறுகளும் இந்த நூலிலே தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டு உள்ளது. மேலும், விவலியப் புறநூல்களில் வருகின்ற சம்பவங்களை எடுத்துரைப்பதற்காக

'கதைக்கூற்றுப் பகுப்பாய்வு' (Narrative Analysis) முறையின்படி 'கதாபாத்திர' (Character) விபரணமும், 'வெளிக்காட்டுதல்' (Showing) மற்றும் 'எடுத்துக்கூறுதல்' (Telling) என்ற இலக்கிய நடையும் கைக்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும், இயேசுவின் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளில் புனித யோசேப்பின் நல்ல தந்தைக்குரிய பண்புகளைக் குறித்துக் காட்ட சிறப்பான இலக்கிய நடையான் அ). கதைமாந்தர்கள் (Characters), ஆ. கதையாடல்கள் (Literary Genre), இ. கதைமாற்றங்கள் (Change of Story) போன்ற இலக்கிய உத்திகள் புகுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு, ஒற்றுமை - வேற்றுமையின் வழியாக புனித



யோசேப்பின் மகத்துவத்தை வெளிக்கொணர 'ஒப்புமை' (Analogy) என்ற இலக்கிய உத்தியும் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**நூலின் முதன்மை நோக்கம் (Primary Purpose):**

இந்த நூலானது மூன்று விதமான முதன்மை நோக்கங்களை மனத்திற்கொண்டு உருப்பெற்றுள்ளது. முதலாவதாக, திருவிவிலியத்திலே புனித யோசேப்பைப் பற்றி நற்செய்திகளில் பெரிதாக குறிப்பிடப்படாததாலும், அவரை நற்செய்தியாளர்கள் ஒரு மௌனியாகவே அனைத்திலும் முன்னிறுத்துவதாலும், மீட்பு வரலாற்றிலே அவரின் மகத்துவமிக்க பங்களிப்பும், இறைத்திட்டத்தை ஏற்று இயேசுவின் நல்ல தந்தையான இறைத்திருவுளத்தைக் குறித்த அவரது கீழ்ப்படிவும், இன்னும் அதிகளவாக இறைமக்கள் மத்தியில் உணரப்படாததாலும், இவரைக் குறித்த அடிப்படை இறையியல் விளக்கப்பாட்டுக் குறைவினால், இவரை இறைமக்களின் நாளாந்த பக்தி முயற்சிகளில் இன்னும் அதிகமாகக் கொண்டுபோய் சேர்க்கவில்லையே என்ற நீண்ட கால ஏக்கத்தின் விழைவாகவே இந்த ஆக்கபூர்வமான முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாவதாக, புனித யோசேப்பு, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலர் என்று அறிவிக்கப்பட்டதன் 150ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், டிசம்பர் 08 அமல அன்னை திருநாளிலே, 2020 செவ்வாயன்று, 'Patris corde' அதாவது, 'ஒரு தந்தையின் இதயத்தோடு' என்ற தலைப்பில் திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டு, புனித யோசேப்பு யூபிலி ஆண்டு ஒன்றையும் அறிவித்தார். இந்த சிறப்புமிக்க புனித யோசேப்பு யூபிலி ஆண்டிலே 'இயேசுவின் நல்ல தந்தையான' இவரைப் பற்றி அனைவருமே ஆழமாக சிந்தித்து, இவரின் நல்ல தந்தைக்குரிய இதயத்தின் பண்புகளை நமதாக்க வேண்டும் என்ற நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்புக்குத் துணையாகவே இந்த நூல் ஆக்கம் பெறலாயிற்று.

மூன்றாவதாக, எமது மன்னார் மறைமாவட்டத்தில் ஏறத்தாழ 24 ஆண்டுகள் ஒரு நல்ல தந்தையாக, புனித யோசேப்பின் பெயரினை தன் பெயராக்கி, புனித யோசேப்பின் இதயத்தை ஒத்தவராக, கனிவான, பரிவான, துணிவான, உழைக்கின்ற, புரிந்துகொள்கின்ற, பணிவான, கடவுளின் நிழலான தந்தையாக, அயராது பணியாற்றி ஆண்டவரின் வலதுகர சம்பாவனைக்காக இந்த வருடம் (2021) சென்றிருக்கின்ற எம் முன்னைய ஆயர் தந்தை அதிவந்தனைக்குரிய அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களை நன்றியோடு நினைத்து, புனித யோசேப்பின் பரிந்துரையை அவரது ஆன்ம ஈடேற்றத்திற்காக இறஞ்சுவதுமே இந்நூலின் ஆக்கபூர்வமான நோக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

**இந்நூலின் இலக்கு (Expected Goal)**

இந்நூலின் பயனால், புனித யோசேப்பின் அருமை பெருமைகளை அனைத்து இறைமக்களும் நன்கு தெரிந்து கொண்டு, அவரின் மீது அதிக பக்திகொண்டு, நல்ல தந்தையான அவரின் இதயத்தை ஒத்த பண்புகளைக் கொண்ட தந்தையர்களாக ஒவ்வொருவரும் வீட்டிலும், சமூகத்திலும், திருஅவையிலும் உருவாக வேண்டும் என்பதையே இங்கே எதிர்பார்க்கப்படுகின்ற விளைவாகக் இந்நூல் கொண்டுள்ளது. இன்று இந்த உலகிற்கு கனிவான, பரிவான, கீழ்ப்படிவுள்ள, படைப்பாற்றல் மிக்க, புரிந்து கொள்கின்ற, நேர்மையான, ஏற்றுக்கொள்கின்ற, மன்னிக்கின்ற, விட்டுக்கொடுக்கின்ற, உழைக்கின்ற, முன்மாதிரிகாட்டுகின்ற, தட்டிவிட நினைக்காத, தம்பட்டமடிக்காத, இகழ்ச்சிக்கு உள்ளாக்காத மனிதர்களே தேவையானவர்களாக இருக்கின்றார்கள். இத்தனை பண்புகளையும் தனதாக்கித் தன்னைத் திரைமறைவில் நிறுத்திக்கொண்டு, மீட்பராம் இயேசுவின் வளர்ப்புத் தந்தையான புனித யோசேப்பின் இதயம் நம் ஒவ்வொருவர் இதயமாக வேண்டும். அவரது செயல்கள் நமது செயல்களாக வேண்டும். இறைவனோடு, இறைவனுக்காக, இறைவனில் காத்திருந்த அவரது எண்ணங்கள் வழிகள் நமதாக வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)




## புனித சூசையப்பர் செபம்

ஓ புனித சூசையப்பரே, நீர் மனிதராக இருந்த போது உன்னதமானவரால்
பெரிதும் நேசிக்கப்பட்டீர். திருக்குடும்பத்தின் மீது நீர் அக்கறைக்கொண்டு இருக்கும் போது
ஆண்டவரின் தூதர் உமது கனவில் தோன்றி, உம்மை எச்சரிக்கவும், வழிகாட்டவும் செய்தார்.
நீர் அமைதியானவர், திடம்படைத்தவர், விசுவாசமும் தைரியமும் உள்ள பாதுகாவலர்.
நீர் இறைவனிடத்தில் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுகையில் எங்களை தயவுகூர்ந்து பாரும்.
எங்கள் தேவைகளை (உங்கள் கோரிக்கைகளையை குறிப்பிடுங்கள்) உமது இதயத்தில் கேட்டருளும்.
எங்கள் தேவைகளை நினைத்து பாரும் அவற்றை உமது அன்பு மகனிடம் இருந்து எங்களுக்கு
பெற்று தந்தருளும். நான் தூக்கத்தில் கடவுளின் குரலை கேட்கவும், அதன் படி எழுந்து
அன்புடன் செயல்படவும் எனக்கு உதவியருளும். புனித சூசையப்பரே நான் உம்மை நேசிக்கின்றேன்,
மகிழ்ச்சியோடு கடவுளை புகழ்ந்து நன்றி செலுத்துகிறேன்..

ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைகள்

# எம் பழமையை மீட்டிப்பார்க்க வைத்த கொடூர கிருமியே கொரோனா

ச.பிரியதர்சன் குரூஸ் (கோல்டன்)
முத்தரிப்புத் துறை மன்னார்
யாழ் பல்கலைக்கழகம் (முதலாம் வருட மாணவன்)

மூவேழு நூற்றாண்டுகளில் கால் பதித்து அப்பாதையை கடந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் எம் பழமை மறந்து விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ந்துக் கொண்டே இருகின்றது. இவ்வாறு இந்த நவீன விஞ்ஞானத்தின் பாரிய வளர்ச்சி எம்மனதுக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் அக மகிழ்வையும் அளிக்கும் அதே சமயம் எமது பழமையும் பண்பாடும் பாரம்பரியங்களும் மறந்து போய் விட்டதே என்று மனதுக்கு மிகுந்த வேதனையும் அளிக்கின்றது. இவ்வாறு இக்காலத்து மனித இனம் தங்கள் பழமையை மறந்து தங்கள் முன்னோரின் வாழ்வியல் முறையை மறந்து நவீன மயமாக்கத்திற்கு வசமாகி எம் பழமைவாதிகளின் பழக்கவழக்கங்களிலிருந்து முற்றாக விலகி இயற்கையையும் வெறுத்து இயந்திரவியல் வாழ்கை முறையை பின்பற்றி வருகின்றார்கள். இதனால் சில வேலையை செய்வதற்கு கூட தன் உடல் உழைப்பை பயன்படுத்தி செய்வது கிடையாது இவ்வாறு தன் சொந்த உடலையே பயன்படுத்தாமல் இயந்திரத்துக்கென்று அர்ப்பணித்து விட்டது இந்த உலகம். இதனால் நவீன யுகத்தில் இருந்து விடுபட முடியாமல் தத்தளிக்கும் இந்த அவலநிலை எம்மிடையே உருப்பெற்று விட்டது. ஆனால் இதனை இயற்கையும் எவ்வளவு காலங்கள் தான் பொறுத்துக்கொள்ளும்? என்ற வினா எம்மிடையே எழுகின்றது. இவ்வாறு எம் பண்பாட்டையும் பழமையையும் மீட்டிபார்க்க இயற்கையானது ஒரு நோய்வடிவில் ஒன்றை ஏவி விட்டிருக்கின்றது. கொடூர கிருமியின் பெயரே ''கொரோனா''அதாவது Covid– 19 என்று எம் எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. எனவே இந்த கொடூர நோயால் உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாளாந்தம் இறந்து கொண்டேயிருக்கின்றார்கள். இவ்வாறிருக்க இன்றைய உலகில் வாழும் நாம் அனைவரும் இயந்திர வாழ்க்கை முறையியலை விடுத்து கொரோனா அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கின்ற வாழ்க்கைக் கோலத்திற்கு மாற வேண்டும் என்பதையும், எம் பழமையை மீண்டும் பின்பற்ற வேண்டும் என்ற செய்தியையும் கண்ணுக்குத் தெரியாத கொரோனா கிருமி வந்து சொல்கின்றது. அதாவது 'இயற்கையோடு வாழுங்கள்' என்று தெளிவாக கூறி நிற்கின்றது. இவ்வாறு இது போன்ற கொடூரமான நோயானது எம்முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் பெரியளவு வந்ததும் இல்லை. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான உயிர்களை கொன்று குவித்ததும் இல்லை. இவ்வாறு நடப்பதற்கு பல காரணங்கள் காணப்பட்டன. அவற்றை இங்கு விரிவாகப் பார்ப்போம்.

அதாவது எம் முன்னோர்கள் வாழ்ந்த வாழிடங்களை உற்று நோக்கினோமானால் அவர்களின் வீடுகள் அனைத்தும் செம்மண் கலந்த சுண்ணாம்பு கலந்த களிமண்ணாலான வீடுகளைக் கட்டி வீட்டின் நிலத்தையும் ஏனைய சுவர் பகுதிகளையும் மாட்டு சாணத்தால் அழுத்தி பூசி மேல் பகுதியை கிடுகுகளால் மேய்ந்திருப்பார்கள். இதனால் இவர்களின் வாழ்விடம் குளிர்மை நிறைந்தாகவும் இவர்களின் வீட்டை சுற்றி எந்த நோய் கிருமிகளும் தொற்றுக்களும் அணுகாத வண்ணம் அவர்கள் பாதுகாப்பாக வாழ்ந்ததோடு எந்தவித நோய்களுமின்றி சந்தோசமாகவும் எளிமையாகவும் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய எம் நவீன சமூகத்தினர் மத்தியில் இதுபோன்று ஒரு வாழிடமாவது காணப்படுகிறதா? விரல் விட்டு எண்ணக்கூடிய வகையிலேயே இவை காணப்படலாம். இதனால் இக்கால சமூகம் ஆடம்பரத்தை விரும்பிய நவீன தொழில்நுட்பத்தோடு இணைந்து மாடமாளிகைகளையும் மாடி வீடுகளையும் கட்டி வசதியாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் எம் முன்னோர் அந்த குடிசை வீடுகளில் வாழ்ந்தாலும் இயற்கையை மிகவும் நேசித்து வாழ்ந்தார்கள் என்பது இதன் மூலமாக தெரிய வருகின்றது. இவ்வாறு எம் முன்னோர் தங்கள் வீடுகளின் முன்னால் பத்து வகையான மரங்களை வளர்ப்பார்களாம். அதாவது குளிக்கும் இடத்தில் வாழை மரமும் தங்களது வீட்டுமுற்றத்தில் துளசி செடியும் மேலும் வேப்பமரத்தோடு இணைந்து தங்களுக்கு பயன்தரக்கூடிய ஏனைய சில மரங்களையும் வளர்த்தார்களாம். இதனால் வீட்டு முற்றத்தில் துளசி செடி வளர்ப்பதன் ஊடாக இச்செடியின் வாசம் எமது மூக்கிற்குள் செல்வதனால் நம் சுவாசத்தை சமநிலைப்படுத்து -கின்றது என்பதை இவர்கள் அறிந்தார்கள். அத்தோடு வேப்பமரத்தின் விதையை அரைத்து புடோல்கொடிக்கு பசளையாக தெளித்து இயற்கையோடு இணைந்த ஒரு சமுதாயமாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு எம் முன்னோர் நிழல் தரக்கூடிய மரங்களை வளர்த்து அதன் கீழ் ஓய்வெடுத்து இம் மரங்களின் கீழ் அமர்ந்துகொண்டு தங்கள் அன்றாட வேலைகளை செய்து இயற்கைமிகு சுத்தமான காற்றினை சுவாசித்தார்கள். ஆனால் இன்றைய இளம் தலைமுறையினர் நுகர்வுக்கலாச்சரத்திற்கு அடிமையாகி தங்கள் வீடுகளிலும் அவர்கள் தொழில்புரியும் இடங்களிலும் இயற்கை காற்றை வெறுத்து இயந்திரக் காற்றை (A.C) சுவாசித்து வருகின்றார்கள். ஆனால் கொரோனா நோய் பரவுவதற்கு இந்த (A.C) காற்றும் ஒருவகைக் காரணமாகும். என சிலர் கூறுகின்றார்கள். இவ்வாறு இயந்திர உலகைவிட்டு இயற்கை உலகிற்கு எம்மை திசை திருப்ப வேண்டும். மேலும் இந்த கொரோனா நோயானது எம்மை அன்றாடம் கைகளை சவர்காரமிட்டு கழுவ வேண்டும். தினமும் உடலை நன்கு சுத்தம் செய்ய வேண்டும், முகக்கவசம் அணிய வேண்டும், மற்றவர்களுடன் உரையாடுகின்ற வேளையில் சமூக இடைவெளியை பேண வேண்டும். என்றெல்லாம் எமக்கு கற்பித்திருக்கின்றது. ஆனால் இந்த விடயங்களையெல்லாம் ஏற்கெனவே எம் முன்னோர் பின்பற்றி வந்திருக்கின்றார்கள். அதாவது வீட்டை விட்டு வெளியிடங்கள் எங்கும் சென்று வந்தாலும் சவர்காரமிட்டு முகம் கை கால்களை கழுவி உடலை சுத்தம் செய்த பின்னரே தங்கள் வீட்டிற்குள் வர அவர்களை அனுமதிப்பார்களாம். அதாவது அவர்கள் வீட்டை விட்டு வெளியே பொது இடங்களுக்கு சென்று வருகின்ற போது அவர்களின் உடலில் கிருமிகளின் தொற்றுக்களும் பொது இடங்களில் காணப்படுகின்ற தீய நுண்ணங்கிகளும் தங்கள் உடலில் தொற்றிக்கொள்ளாமலும் வீட்டில் உள்ள ஏனையோருக்கும் தொற்றாமல் இருக்கவும் இவற்றை மேற்கொண்டனர். மேலும் தாங்கள் அணிந்து செல்லுகின்ற மிதியடியிலும் கிருமிகள் இருக்கும் என்பதால் வீட்டின் வெளியே ஓரமாக வைத்துவிட்டே உள்நுழைவார்களாம்.



ஆனால் இவற்றையெல்லாம் மறந்து எம் நவீன சமூகம் அலைமோதி திரிந்த வேளையில் இவையனைத்தையும் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறி நிற்கின்றது இந்த நோய்.

மேலும் பல்லாயிரக்கணக்கான உயிர்களை அழிக்கும் இந்த கொடிய நோயிலும் இருந்து விடுபட ஒருநாளைக்கு ஐந்து அல்லது ஆறு தடைவைகள் வெந்நீர் வைத்து குளிக்க வேண்டும். எனவும் வெந்நீர் வைத்து ஆவி பிடிக்கவேண்டும் எனவும் ஆய்வாளர்கள் கூறிவருகின்றார்கள். ஆனால் இம்முறையானது இன்று அல்ல எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் எம் பழங்குடிகள் தங்கள் உடலை கிருமிதொற்றுக்கள் இன்றி சுத்தமாக வைத்திருக்க தினமும் வெந்நீர் வைத்து குளித்தும் குடித்தும் ஆவிபிடித்தும் வந்தார்கள். மேலும் இன்னோர் வியப்பான விடயம் என்ன வென்றால் எம் முற்காலத்தினர் கட்டிய குளியலறையுடன் இணைந்து வெந்நீர் வைத்துக் குளிப்பதற்கென்று வெந்நீர் தடம் ஒன்றையும் அடைத்திருந்தார்கள். என்று வரலாறுகள் கூறுகின்றன. இத்தோடு எம் முன்னோர் தினமும் அதிகாலை எழுந்தவுடன் மாட்டுச் சாணத்தினை எடுத்து அதை நீருடன் கரைந்து அக்கலவைக்குள் வேப்பம் இலைக்கொத்தை தொட்டு வீட்டிற்குள்ளேயும் முற்றத்திற்கும் தெளிப்பார்கள். ஏனென்றால் தங்கள் வீடுகளில் உள்ள கிருமிகள் தொற்றுக்கள் அனைத்தையும் நீக்கிவிடும் என்பதற்காக இவ்வாறு செய்து வந்திருக்கின்றார்கள். இதனால் எம் முன்னோர்கள் தங்களை மட்டுமல்ல தாங்கள் இருந்த இல்லங்களையும் சுகாதார முறைப்படி பாதுகாத்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது இதன்மூலம் தெரியவருகின்றது. ஆனால் இக்கால சமூகத்தில் இந்த இயற்கை முறையிலான தொற்று நீக்கு முறைகள் அனைத்தும் ஒழிந்து அவை அனைத்தையும் அனைவரும் மறந்து இரசாயன திரவக் கலவையினை கொண்டு எம் இல்லங்களை சுத்தம் செய்து வருகின்றனர். இன்றைய சமூகம், ஆனால் இவையெல்லா வற்றையும் மறந்து எம் இயற்கை முறையையும் எம் பழமையையும் மீட்டிப்பார்க்க வைத்தது இந்த கொடூர கிருமி. இவ்வாறு "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று வாழ்ந்து வந்த எம் முன்னோர்களின் உணவு பழக்கத்தை எடுத்துக் கொண்டால் அவர்களின் உணவுகளில் அதிகம் சுகாதாரத்தைப் பேணி அந்த ஊட்டசத்துக்களை தரக்கூடிய போசாக்கு மிக்க உணவுகளாகிய காய்கறிகள் கீரைவகைகள் பழ வகைகளை அதிகம் உண்டதோடு தங்கள் வீடுகளிலே தம் கைப்பட வளர்க்கப்பட்ட ஆரோக்கியமான சில விலங்குகளை மட்டும் இறைச்சிக்காக பயன்படுத்தி உண்டு வந்தனார். இதனால் எளிமையான சுகாதாரமான உணவுப் பழக்கத்தினால் நீண்ட ஆயுளையும் நிறைந்த ஆற்றலையும் பெற்று வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால் இக்கால இளம் தலைமுறையினரின் உணவு பழக்கத்தில் ஒரு கட்டுப்பாடு என்பது கிடையாது கண்டதையும் உண்டு விட்டு செல்கின்றது. இக்கால இளம்சமூகம். இவர்களின் உணவில் முன்னோர் கட்டிக்காத்த சுகாதார நடைமுறைகள் குறைந்த உணவில் அதிக சுவையூட்டிகளும் இரசாயன கலப்படங்களும் கலந்துள்ளதோடு இவர்களின் உணவில் வரையறையின்றி கண்ட கண்ட விலங்குகள் ஆன (பாம்பு பல்லி தவளை பூச்சி வகைகள் நாய் குரங்கு) போன்றவைக்கூட நாம் வாய்க் கட்டுபாடு என்ற ஒன்று இல்லாமலே உண்கின்றோம். இவற்றை விட இன்று வரை நம் மக்கள் விரும்புகின்ற உணவாக "புரொயிலர்" கோழியினை குறிப்பிடலாம். இவ்வாறு எம் ஆதி காலத்தினர் தம் கைகளினால் வளர்க்கப்பட்ட நாட்டுகோழி மட்டுமே உண்டு வந்தார்கள். இவ்வாறு கோழிகள் வளர கிட்டத்தட்ட ஆறுமாதங்கள் ஆகும். ஆனால் நாம் அதிகம் விரும்புகின்ற இந்த" புரொயிலர்" கோழியானது மிக மிக குறுகிய நாட்களில் ஓரிடத்தில் அடைத்து வளர்கப்பட்டு பெரியமுட்டை கோழியாக எமக்கு தருகின்றார்கள். இவ் உணவும் இவ் நோய் தொற்றுக்கு ஒரு காரணம் என்கின்றனர். இவ்வாறு எம் முன்னோருக்கும் தற்போது உள்ள சமூகத்தினருக்கும் இடையே காணப்படுகின்ற உணவுப்பழக்க வேறுப்பாட்டை ஒரு கொத்தனாரின் (மேசன்) கூற்றிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. அதாவது ஒரு கொத்தனார் கூறிய கருத்தின்படி பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட மலசல கூடங்களின் கழிவு சேகரிப்பு பகுதியில் நிலத்தோடு கழிவுகள் நீண்ட காலம் வெடிக்காமல் இருக்குமாம். ஆனால் இன்றைய நிலையில் ஒரு கழிவுகள் சேமிப்பு பகுதி மூன்று அல்லது நான்கு வருடமே உத்தரவாதம் கொடுக்கின்றார்களாம். மேலும் நாம் அனைவரும் பழமைக்கு திசைதிருப்ப வேண்டும் என்று கூறி வரும் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விடயத்தை குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது பொலிவியா என்ற நாட்டில் வாழுகின்ற "சிமானே" என்ற மக்களே "உலகில் மிகவும் ஆரோக்கியமான மக்கள்" என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் ஒரு நாளைக்கு தொண்ணூற்று ஏழாயிரம் அடித்தூரம் நடப்பார்களாம். அத்தோடு இவர்கள் வெளி உலகத்தோடு தொடர்புபட்டிருக்க மாட்டார்களாம். இவ்வாறு நெடுந்தூரம் நடப்பதோடு இவர்கள் உண்பதற்கு இயற்கையான பழங்களையும் மரங்களையும் வைத்து இயற்கையான முறையில் உண்டு வாழ்ந்து வருகின்றார் -களாம். இதை விட இவர்களின் இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால் இம்மக்கள் திருமணம் செய்தவுடனே உடலுறவு கொள்ள மாட்டார்கள். இதனால் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு பின்னரே குழந்தையை பெற்றெடுப்பார்களாம். அதுவரைக்கும் கணவனும் மனைவியும் உடலுறவு கொள்ளமல் இருக்கமுடியாது என்பதற்காக மாப்பிள்ளையை இளஞ்சுடுநீரில் சிறிது நேரம் உட்கார வைத்து விடுவார்களாம். இதனால் விந்துக்கள் கொதி நிலையடைவதன் காரணமாக மனைவியால் விரைவில் கர்ப்பம் தரிக்க முடியாது இவ்வாறு இம்மக்கள் தங்கள் திருமண வாழ்வின் பின்னும் சுகாதார முறையை அடிப்படையாக பேணி வந்ததோடு வெந்நீரே அனைத்துக்கும் முதல் தீர்வு என்பதை இம் மக்கள் அன்றே அறிந்துக் கொண்டனர். ஆனால் இன்றைய இளம் தலைமுறையினருக்கு வெந்நீரே அனைத்துக்கும் முதல் தீர்வு என்பதை கொரோனா வைரசு மீண்டும் எமக்கு கற்பித்துக் கொண்டே வருகின்றது. இவ்வாறு ஆரோக்கியமாக வாழ்ந்த இந்த மக்களே "World Healthiest" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றனர். இன்னுமாக "அணில் வளர்த்தேன் ஓடிவிட்டது. குருவி வளர்த்தேன் பறந்து விட்டது ஆனால் ஒரு மரம் வளர்த்தேன் எல்லாம் திரும்பி வந்தது". என்று அறிவியல் மேதை அப்துல்கலாம் மரங்களின் முக்கியத்துவம் பற்றி கூறுகின்றார். ஆனால் இன்று "மரத்தை வெட்டி நிலை கதவை செய்து விட்டு காற்று இல்லை என்று கதவை திறந்து வைத்தால் காற்று வருமா?" அன்பானவர்களே! சற்று சிந்திப்போம். மரங்களை நேசித்து மரங்களிற்கு கீழ் மனிதன் வாழ்ந்த காலத்தில் அவன் எந்த பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை. இவ்வாறு ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு 426 வகையான மரங்கள் அத்தியவசியமாக காணப்படுகின்றன. ஆனால் எம் நாட்டை பொறுத்தவரை ஒரு மனிதன் உயிர் வாழ 16% வீதமான மரங்களே காணப்படுகின்றன. மக்களே! இவ்வாறு இயற்கையை நேசித்து மரங்களை நேசித்து வாழ்ந்த மனிதன் உயிர் கொல்லி நோய்களின் தாக்கத்திற்கு பெரிதளவு உள்ளாகவில்லை. இதனால் மனிதனை இயற்கையோடு இணைந்து வாழ இந்த நோய்கள் வலியுறுத்துகின்றன.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய சாரளம்

## மூச்சுத்திணறலும் (சுவாசப்பாதை அடைப்பு) அதற்கான முதலுதவியும்

**திரு.ச.தேவசகாயம், நியூயோர்க் USA.**

மூச்சுத்திணறலும் (சுவாசப்பாதை அடைப்பும்) அதற்கான முதலுதவியும். மூச்சுத்திணறல் என்பது சுவாசப்பாதையில் உணவு அல்லது பிற பொருட்கள் அடைப்பதன்காரணமாக சுவாசப் பாதையில் ஏற்படும் தடையாகும். நாம் உணவு உண்ணும்போது சிலவேளைகளில் இருமலுடன் உணவும் நீரும் நமது மூக்கு வழியே வெயியேறும். இதனை நமது வீடுகளில் நமக்கு புரக்கேறியுள்ளது அல்லது நெருக்கமானவர்கள் யாரோ நம்மை நினைக்கிறார்கள் என்பார்கள். ஆனால் அப்படியொன்றும் இல்லை மாறாக நாம் உணவு உண்ணும்போது சுவாசப்பாதை திறப்பதன் விளைவாக உணவானது உணவுக் கால்வாயிலிருந்து சுவாசக் குழாய்குள்ளே செல்வதன் காரணமாக இவ்வாறு ஏற்படுகின்றது.



மூச்சுத்திணறலின் போது சுவாசப்பாதையை தடைசெய்யும் பொருளின் அளவினைப் பொறுத்து இதன் தாக்கம் காணப்படுகின்றது. பொதுவாக உணவு மற்றும் குழந்தைகளாயின் சிறிய விதைகள், அழிஇறப்பர், நாணயம், போன்ற சிறிய பொருட்களை வாயில் போடுவதன் காரணமாக இப்பொருட்கள் சுவாசப்பாதையில் சென்று சுவாசப்பாதையினை பகுதியளவாக அல்லது முழுமையாக அடைக்கலாம். இது மிகவும் ஆபத்தானதாக அமையும் எனவே இச்சந்தர்ப்பத்தில் ஒரு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எவ்வாறு முதலுதவி செய்யலாம் என்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

சுவாசப்பாதையினுள் சென்ற பொருள் சுவாசப்பாதையினை பகுதியளவில் அடைத்திருப்பின் பாதிப்புக்குள்ளானவர் பேசக் கூடியவராக இருப்பார். ஆனால் சுவாசப்பாதை முழுமையாக தடைப்பட்டிருக்குமாயின் நோயாளியாயின் தொண்டையினைப் பிடித்தவாறு பேசுவதற்கு முடியாது இருப்பார். இருமல் மற்றும் சுவாசிக்க சிரமப்படுவார் மற்றும் மிக விரைவாக சுவாசம் தடைப்படும்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் முதலுதவியாளரின் பிரதான நோக்கமானது நோயாளியின் தொண்டையில் அடைபட்டுள்ள பிற பொருளை விரைவாக அகற்றுதல். மிக விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதலாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பின்வரும் முதலுதவி முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

முதலில் நோயாளி சுவாசிப்பாராயின் அவரை நன்றாக இருமுமாறு கூறவும். அவ்வாறு இருமும்போது சுவாசப்பாதையில் அடைபட்டுள்ள பொருள் வெளியே வரும். நோயாளி இருமிய பின்னர் அவரின் வாயினுள் ஏதாவது பொருள் வந்துள்ளதா என்பதைப் பரிசோதிக்கவும்.

நோயாளி பேச முடியாமல் இருமிக்கொண்டு, அல்லது சுவாசம் இன்றி இருக்கும்போது நோயாளியை சற்று முன்நோக்கி குனிய வைத்து உங்களின் ஒரு கையால் அவரது நெஞ்சுக்கு நேராக ஆதாரப்படுத்திக் கொள்ளவும். உங்களின் மற்றைய கையால் நோயாளியின் இரண்டு தோள்பட்டைகளுக்கும் நடுவே உங்களின் கையை விரித்து வைத்துக்கொண்டு ஐந்து தடைவை அடிக்கவும் பின்னர் நோயாளியின் வாயினைப் பரிசோதிக்கவும் வாயினுள் எதாவது பொருள் வந்துள்ளதா எனப் பரிசோதிக்கவும். (படம்-1 இனைப் பார்க்கவும்)

இவ்வாறு செய்தும் தொண்டையில் அடைபட்ட பொருள் வர வில்லையாயின் அடிவயிறு அமுக்கத்தினைப் பிரயோகிக்கவும். அதாவது நோயாளியின் பின்னால் நின்றுகொண்டு உங்களின் இரண்டு கைகளையும் நோயாளியின் அடிவயிற்றுப்பகுதியில் தொப்புளுக்கு சற்று கீழாக அடிவயிற்றில் வைத்துகொள்ளவும். இந்த சந்தர்ப்பத்தில் நோயாளி சற்று முன்நோக்கி குனிந்து இருக்க வேண்டும். உங்களின் ஒரு கையை பொத்திப்பிடித்தவாறு தொப்புளின் கீழ் அடிவயிற்றில் வைத்து மற்றைய கையை அதன்மேல் வைத்து வயிற்றின் உட்பகுதி நோக்கி அமுக்கி மேல் தள்ளவும். இவ்வாறு ஐந்து தடைவைகள் அமுக்கவும். இம்முறையினை கர்ப்பிணி தாய்மாருக்கு செய்ய வேண்டாம். (படம-2 இனைப் பார்க்கவும்)

பின்னர் நோயாளியின் வாயினுள் ஏதாவது பொருள் வந்துள்ளதா என்பதைப்பரிசோதிக்கவும். இருப்பினும் இதன்போதும் எந்த பயனும் கிடைக்காதபோது மேலே செய்த இரண்டாவது மற்றும் மூன்றாவது முறைகளை மீண்டும் மூன்று தடவைகள் செய்த பின்னர் வாயினுள் பரிசோதிக்கவும். இருப்பினும் தொண்டையில் அடைபட்ட பொருள் வரவில்லையாயின் உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவும்.

நோயாளி சுயநினைவு இழப்பாராயின் அவரது சுவாசப்பாதையை திறந்து சுவாசத்தைப் பரிசோதிக்கவும். நோயாளியின் சுவாசம் தடைப்பட்டிருக்குமாயின் உடனடியாக செயற்கைச்சவாசம் மற்றும் வெளிமார்பு அமுக்கம் என்பதை செய்து கொண்டு உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும். இதனை முறையாக பயிற்சி பெற்ற ஒருவரால் மட்டுமே செய்ய முடியும் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பாக ஒருவயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இச்செய்முறையானது வேறுபட்டதாகும். அவர்களுக்கு இம்முறையினைப் பயன்படுத்த வேண்டாம் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

குறிப்பாக சிறுவர்கள் விளையாடும்போது அவர்கள் வாயினுள் போடக்கூடிய புளியங்கொட்டை, குண்டுமணி, அழி இறப்பர், சட்டைப் பொத்தான், நாணயங்கள் போன்ற பொருட்களை கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். முதலுதவி முறைகளை அறிவீர் வீணான உயிரிழப்பினைத் தவிப்பீர்.●

## முருங்கை கீரை உண்ணும் முறையும் தீரும் நோய்களும்



❖ முருங்கை கீரையுடன் உப்பு சேர்த்து அவித்து தொடர்ந்து 15 நாட்கள் சாப்பிட்டால் மூட்டு வலிகள் குறையும்.

❖ முருங்கை கீரையுடன் பூண்டு, உப்பு, மஞ்சள் சேர்த்து அவித்து சாப்பிட்டால் வாய்வு கோளாறுகள் தீரும்.

❖ முருங்கை கீரை சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி தூள் இடித்து காலை, மாலை 2g அளவு தேனில் சாப்பிட்டால் இரத்த அழுத்தம் இதய நோய் தீரும்.

❖ முருங்கை சாற்றில் மிளகு, அதிமதுரம் இரண்டையும் ஊற வைத்து பவுடர் செய்து தினம் 2g அளவு காலை, மாலை தேனில் சாப்பிட்டால் கசம், கப நோய், இருமல் தீரும்.

❖ முருங்கை கீரையுடன் சிறிது கறுப்பு எள் சேர்த்து கஷாயமாக்கி ஒரு வாரம் சாப்பிட்டால் தடைபட்டிருக்கும் மாதவிடாய் சரியாகும்.

❖ இப்படி முருங்கை கீரையில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. எனவே நாள்தோறும் உணவில் ஒரு கீரை வகை என்ற அடிப்படையில் முருங்கை கீரைக்கும் முன்னுரிமை கொடுப்போம்.●

பிலிப்பு சில்வா
ஆயள்வேத வைத்தியர்

## வாயுத்தொல்லை நீக்கும் மூலிகை சூப்



**தேவையான பொருட்கள்:**

கற்பூரவள்ளி இலை – 10, ஓமம் – 2 டீஸ்பூன், சீரகம் – 2 டீஸ்பூன், தனியா – 2 டீஸ்பூன், மிளகு – 4, இஞ்சி – ஒரு துண்டு, பூண்டு – 4 பல், பெருங்காயத்தூள் – ஒரு சிட்டிகை, வெற்றிலை – நான்கு, நெய் 2 டீஸ்பூன், உப்பு தேவையான அளவிற்கு.

**செய்முறை விளக்கம்:**

சட்டியில் ஒரு டீஸ்பூன் அளவிற்கு நெய் விட்டு, கற்பூரவள்ளி இலை, வெற்றிலை ஆகியவற்றை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். பிறகு மற்றொரு சட்டியில் கொஞ்சமாக நெய் சேர்த்து காய விடுங்கள். பின்னர் அதில் சீரகம், மல்லி, மிளகு, பெருஞ்சீரகம், ஓமம், பூண்டு, பெருங்காயத்தூள் ஆகியவற்றை சேர்த்து லேசாக வதக்கி பின்னர் வதக்கி வைத்துள்ள கற்பூரவள்ளி இலை மற்றும் வெற்றிலையும் சேர்த்து கொள்ளுங்கள். பின் அதனுடன் 2 கப் அளவிற்கு தண்ணீர் ஊற்றி தேவையான அளவிற்கு உப்பு சேர்த்து நன்கு கொதிக்க விட வேண்டும். கொதித்து சூப் பதத்துக்கு வந்ததும் அடுப்பை அணைத்து பரிமாற வேண்டியது தான்.●

## நோய்த்தடுப்பு சக்தியை அதிகரிக்கும் முத்திரை



**இந்த முத்திரை உடலின் நோய்த்தடுப்பு சக்தியை அதிகரிக்கும். செரிமான அமைப்பை மேம்படுத்துகிறது. களைப்பை போக்கி, ஆற்றல் திறனுடன் வைத்திருக்கவும் உதவும்.**

**செய்முறை**

சுண்டுவிரல் மற்றும் மோதிர விரல் இரண்டையும் சேர்த்து மடக்கி வைத்து, பெருவிரலால் தொட வேண்டும். மற்ற இரு விரல்களும் நேராக இருக்க வேண்டும்.

**பலன்கள்**

வாழ்க்கையைக் குறிக்கும் முத்திரை இது. பெயருக்கு ஏற்றார் போல் வாழ்வின் சிறப்புக்கு வகை செய்யும். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் செய்யலாம். இந்த முத்திரை நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். விற்றமின் குறைபாடு நீங்கும்.

சோர்வு நீங்கும். கண் பார்வை சிறப்பாகும். செரிமான அமைப்பை மேம்படுத்துகிறது. களைப்பை போக்கி, ஆற்றல் திறனுடன் வைத்திருக்கவும் உதவும். நரம்புத் தளர்ச்சியைப் போக்கும். உடலின் நோய்த்தடுப்பு சக்தியை அதிகரிக்கும். பொதுவாக உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது.●

## கொஞ்சம் சிரிங்க





**ஜோன்ஸ்:** ரன்னிங் ரேஸ்ல இப்படி சின்ன ஸ்டெப் போட்டு ஓடினா எப்படி ஜெயிக்க முடியும்.

**ரீன்ஸ்:** எங்கப்பா தான் அகலக்கால் வைக்காதேன்னு சொன்னாரு

..........................

**அஜய்:** எனக்கொரு சந்தேகம்

**விஜய்:** என்னடா அது

**அஜய்:** ஹேண்ட் வாஸ்னா கைகழுவுறது, பேஷ் வாஸ்னா முகம் கழுவுறது அப்ப பிரைன் வாஸ்னா மூளை கழுவுறதா?

**விஜய்:** ?????

**கடவுள் :** உனக்கு என்ன வரம் வேண்டும்.

**பக்தன் :** அழ்கான மனைவி வேண்டும்

**கடவுள் :** நீ முஸ்லிம்னா கத்தரினா தரேன், இந்து மதம்னா அனுஸ்கா தரேன், கிறிஸ்தவன்னா ஜெனிலியா தரேன். உன் பெயர் என்ன?

**பக்தன் :** அப்துல் நாராயண பெர்ணான்டஸ்

..........................

**ஆசிரியர்:** பாடம் எல்லாம் முடிஞ்சுது ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க, எதுவா இருந்தாலும் தயக்கம் இல்லாமல் கேளுங்க.

**மாணவன்:** சேர் உங்க பொண்ணு பேர் என்ன?

**ஆசிரியர்:** ...........?

**பெண்:** ஹலோ கஸ்டமர் கேர் தானே

**கஸ்டமர் கேர் :** ஆமாம் சொல்லுங்க மேடம்

**பெண் :** என் ஐந்து வயசு பையன் சிம் கார்டை விழுங்கிட்டான்.

**கஸ்டமர் கேர் :** அப்படின்னா டொக்டர்ட கூட்டிட்டு போங்க மேடம்

**பெண் :** இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சு, அவன் பேசும் போது காசு போகுமா சேர்?

**கஸ்டமர் கேர் :** ????

## மன்னா விளம்பரப் பலகை

| | | | |
|---|---|---|---|
| நீ எதை நினைக்கிறாயோ அதுவாக இருக்கிறாய் உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய் | கஷ்டத்தை நீ நன்கு கவனித்துப்பார் அதில் துணிச்சல் தென்படும் அதை புரிந்துகொண்டால் துணிச்சல் என்பது நீ அணியும் ஆடையாக உன்னை அலங்கரிக்கும் | நேர்மையுடன் நில்லுங்கள் தைரியமாக இருங்கள் சற்றும் பிறழாத நீதிமான்களாக இருங்கள் தோல்வி கண்ட போதும் துவளாமல் இருங்கள் | நற்பண்பு இல்லாத அறிவு ஆபத்தானது அறிவில்லாத நற்பண்பு பயனற்றது... தவறான பதிலைக் காட்டிலும் மௌனம் சிறந்தது எதிரியை விட நாக்கையே [illegible] வேண்டும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## காவியநாயகன் அருட்பணி மரிய சேவியர்

காலைப் பொழுதினிலே முகநூல் பதிவு கண்டேன்.
காலன் பறித்த கலைக்குரவன் எனும் தலைப்பில்
ஏங்கித் துயில் எழுந்து யாரென அறிந்துகொண்டேன்.
இயக்குனர் சிகரம் கலைத்தூது அடிகளார் என்று

மரியாளின் தாழ்ச்சிதனை தன்னகத்தே கொண்டதனால்
மரிய சேவியர் என்றனரோ நானறியேன்
கொலிவூட்டும் பொலிவூட்டும் வியக்கும் வகையினிலே
நெறியாண்ட எங்களின் நாடகக் கீர்த்தி இவன்

உலகத்தின் எல்லையெங்கும் யேசுவின் பாடுகளை
மூன்று மணி நேரத்துள் கச்சிதமாய் அடக்கியவன்.
கலைக்காகத் தனைக் கொடுத்த சாதனைத் தமிழன் இவன்
உலகமே வியந்து நிற்கும் கலைப்பிதா மகான் இவன்

கல்வாரி யாகமதை விதம் விதமாய் கூறியதால்
இயேசுவும் உனை அழைத்தார் புனித வியாழனிலே
இனி வரும் காலமெல்லாம் கலை மாமுனியே
புனித வியாழன் என்றால் உன் நினைவு கூட வரும்

இறுதியாய் ஒன்று சொல்வேன் என் வார்த்தைகள் இவை அல்ல
இயேசுவின் வார்த்தைகள் தான் எவை அந்த வார்த்தைகளாம்
சொந்த இடந்தனிலே நீதிமானுக்கிலை மதிப்பு
அருளாளர் சேவியரே இவ்வார்த்தைகள் உனக்கும் தான்

எட்வேட் மாஸ்ரர்
சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு 04

## "எண்ணத்தில் மாற்றம்"

புழுதியில் பிறந்த நாங்கள் பூமியில் தவழ்கின்றோம்
புதுபல எண்ணங்களுடன் நேர்மையால்
வாழ்வதை மறந்து
குறுக்கு வழியில் பயணம் செய்கின்றோம்
குறுகிய பல எண்ணங்களுடன்

பணத்தின் மீது கொண்ட மோகம்
புண்ணியத்தின் பலாபலன் புரியாமல்
பாவத்தில் நடக்கின்றோம்
பல எண்ணங்களுடன்

வாழ்வதனின் எல்லை தொட
வான்வரையும் சென்றேனும்
வன்மமுடன் ஓடுகின்றோம்
மனதில் பல எண்ணங்களுடன்

எத்தனை எத்தனை எண்ணங்கள்
என் வாழ்வில் கொண்டாலும்
படைத்தவனே படைப்பிற்கு முதலாளி
அவன் போட்ட திட்டத்தை அவனியிலே அழிப்பதற்கு
பிறந்தவர் தான் யாருமுண்டோ

இவ்வுலகில் மனிதர்களாய்
உண்மைதனைத் தான் உணர்ந்து
எண்ணமதில் மாற்றம் கண்டு ஏற்றத்தில்
உவகை கொண்டு
உள்ளத்தில் மகிழ்வு கண்டு - என்றும்
உருவாக்குவோம் புதிய உலகை.

- சி. சுஜிவன், மருதோட் -

## கொரோனா என்ற கொடுமை



கொலைகார கொரோனா வைரசே — நீ
கொலை எடுத்த உயிர்கள் எத்தனை எத்தனை — உன்
கொடுமைகளை எம்மால் தாங்க முடியவில்லை

நீ இந்த பூமிக்கு அவதரித்த பிறகு
முககவசம் சமூக இடைவெளி தடுப்பூசி
கை கழுவும் முறை வைரசின் திரிபுகள் போன்ற
எத்தனை சொற்களை எமக்கு பழக்கப்படுத்திவிட்டாய்

அன்றாட கூலித் தொழிலாளர்களின் குடும்ப
வாழ்வை குலைத்தாய்
ஆலயங்களில் வழிபாட்டை தடை செய்தாய்
சுகாதார பணியாளர்களின் விடுமுறையை
நிறுத்தி வைத்தாய்
பள்ளி செல்லும் மாணவர்களின் கல்வியை சீரழித்தாய்

கொடிய வைரசே நீ மனித மனங்களில்
பீதியை ஏற்படுத்தினாய்
அருகில் உள்ளவரை அணுக முடியா அளவிற்கு
அச்சத்தை தோற்றுவித்தாய்
புன்னகை என்பதை எம் கண்களால்
காணமுடியாத அளவிற்கு
எம்மை இந்த உலகில் வாழப் பழக்கிவிட்டாயே

நீ பலியெடுத்த உயிர்கள் மற்றும் உறவுகளை எண்ணி
கண்ணீர் விடும் மனித குலத்தின் அவல நிலையைப் பார்
அவர்களுக்கு நிம்மதி என்பதே நிரந்தரமாக மறந்துவிட்டதே
கண்ணீரே அவர்களின் துணையாகிவிட்டது
தமது உயிர் பிள்ளைகள் இவையெல்லாவற்றையுமே மறந்து
தமது கடமைகள் கண்ணியமாக ஆற்றிவந்த எத்தனை
வைத்தியர்கள் மருத்துவப் பணியாளர்கள் செவிலியர்களின்
உயிர்களை நீ கொன்றெடுத்து பசி தீர்த்துவிட்டாய்

இறைவா! இனி ஒரு போதும் இப்படியொரு தொற்றுநோய்
வேண்டவே வேண்டாம் எம்மை இவ்வளவு காலமும்
முடக்கி வைத்தது போதும் இனியாவது இந்த தொற்றிலிருந்து
விடுதலையும் நிம்மதியான வாழ்வையும் கொடுத்திடுவாயா…..?

சுயநலம், சாதி வேற்றுமை போன்ற பண்புகள் எம்
சமூகங்களில் இருந்து விலக்கி வைத்து
சகோதரத்துவம், மனிதநேயம் போன்ற
சமூகப்பண்புகள் இணைத்து கொள்ளவும்

கோபம், பகைமை, துரோகம், கொலைவெறி
போன்ற முகக்கவசங்களை மனித மனங்களிலிருந்து
எடுத்துவிட்டு அன்பு கருணை சமத்துவம் போன்ற
கவசங்களை அணிய உதவி செய்வாயாக இறைவா…….

கொரோனாவின் தாக்கங்கள் எம் மத்தியில்
இருந்து வெகுவிரைவில் நீங்கி எம் மனங்களில்
நல்ல சிந்தனைகள் தோன்றவும் அவை
எம் சமூகத்திற்கு நல்லமாற்றங்களை ஏற்படுத்தவும்
பரம்பொருளே எமக்கு வரம் தருவாயா…….

ஜெயகாந்தன் கனிஸ்ரா,
முருங்கன் பிட்டி.

## வாழ்வின் கல்வி மறைக்கல்வி

உன்னதமான மறைதனைப் போதிக்க
உலகை வெல்ல வழிதனைக் காண்பிக்க
உண்மையான வாழ்வுதனையெமக்குக் கற்பிக்க
உதயமான கல்வி மறைக்கல்வி!

உயிரைப்பறிக்கும் கொள்ளைநோயின் தாக்கத்தில்
உறவுகளையிழந்து தவிக்கும் மக்களின் ஏக்கத்தில்
உறைவிடங்களிலேயே இருந்தவாறே தினம் தினம்
உயிரோட்டமான வாழ்வினை வாழ
அழைக்கும் மறைக்கல்வியே!

உல்லாச வாழ்வை வாழ்ந்து கடமைக்கு கற்ற மறைக்கல்வியை
உண்மையாய் வாழ்வாக்கிட அழைப்பு விடுக்கும் காலமிதே!
உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகளேதுமின்றி
உலகத்தார் அனைவர்க்கும் பயனளிக்கின்றதே
இம் மறைக்கல்வி!

உணர்வுகளூடாக இறைவனைச் சந்தித்து
உயரிய நிலைவாழ்வைச் சற்றே சிந்தித்து
உலக மாயைகளை விட்டு விலக
உத்தம மறையாசிரியர்கள் மூலம்
வழிநடத்தும் மறைக்கல்வியே!

உணவாய் எம்மில் உறவாய் எழுந்து
உறைந்திடும் இறைவனில் நாளும் மகிழ்ந்து
உடைந்திடும் உள்ளங்களைத் தேற்றி
உறுதியளித்து உதவிடும் மறைக்கல்வியே!

உவகையின்றி வாழ்வில் தடுமாறும் உள்ளங்களை
உவமை மூலம் திடமாக்கிடும் மறைக்கல்வியே!
உள்ளதை நாளும் பிறருடன் பகிர்ந்து
உதவும் மனப்பாங்கினை வளர்த்திடும் மறைக்கல்வியே!

உருக்குலைந்த எம் வாழ்வினைச் சீராக்கி
உரமாய் ஆன்ம வாழ்வுக்கு வழிகாட்டி
உலகிற்கொளியாய் சேவைதனை வழங்கிவரும்
மறைக்கல்வியே!
உயர்ந்த கல்விகளுள் சிறந்த கல்வியே!
உன் பணி தொடர்க!!! மேலும் வளர்க!!!



அபிஷானி ஜெனிங்ஸ்,
24/7இ குழந்தையேசுபுரம்,
மன்னார்.

## ஹைக்கூ

### சரிவு
சரிவுகள் சறுக்கி விழ அல்ல
சடுதியில் மீண்டும்
சாதிக்க!

### மரபியல்
மரபியல்கள் மாறாதது என்பதை
மறையிலக்கணமாய் தந்த
மகவுகள்!

### முதியோர் பென்ஷன்
ஊழியம் செய்யாமலே
வாங்கும் ஓய்வு ஊதியம்!





### முதியோர்
முன்னாள் நினைவுகள்
முள்ளாய் குத்தும் நினைவுள்
முதியோரின் மலரும் நினைவுகள்



### காலைச் சூரியன்
வைகறைப் பெண்ணின்
நாணிச் சிவந்த
கன்னம்!

### மழை
விண்ணிலிருந்து
மண்ணுக்குள் இறங்கும்
விழுதுகள்!

### மன்னா வாசகர்களே!
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.223
## எரேமியா (அதிகாரம் 37 முதல் 44 முடிய)

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | | 03 | | | 04 | ✸ | |
| | 05 | | | | | | | | 06 | |
| | | | | 07 | | | 08 | | | |
| | | | 09 | ✸ | | 10 | ✸ | | | |
| | | | | | 11 | | | 12 | | |
| | 13 | | | | | | | | ✸ | |
| | | | ✸ | ✸ | | 14 | | | | |
| | | | ✸ | 15 | | | | 16 | | |
| | | | | 17 | | | | | | 18 |
| 19 | | 20 | | | ✸ | | | | 21 | ✸ |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. எரேமியா நிலவறைக் .......................... சென்று அங்கே நெடுநாள் தங்கியிருந்தார்.
5. நாங்கள செய்துகொண்ட எல்லா ...................... களையும் திண்ணமாய் நிறைவேற்றுவோம்.
11. அங்கிருந்து ....................... திரும்பிச் செல்வான்.
13. ஏனெனில் அவ்வீடு ஒரு .................... மாற்றப்பட்டிருந்தது.
14. ஆண்டவருக்கு .............. நீங்கள் பாவம் செய்துள்ளீர்கள்.
15. நீ வாளால் .......................... மாட்டாய்.
17. நீர் என்னிடம் எதையும் .......................க் கூடாது.
19. கல்தேயர் மீண்டும் வந்து ..................த் தாக்குவர்.

**மேலிருந்து கீழ்**

1. அதன்பின் எரேமியா காவல் ................ தங்கி இருந்தார்.
2. ....................... பஞ்சத்துக்கும் அவர்கள் இரையாவார்கள்.
4. அதை அவர் தம் .................. கொள்ளவில்லையா?
6. எரேமியா .....................க் கூடத்திற்குள் சென்று அங்கே நெடுநாள் தங்கியிருந்தார்.
11. அந்நாட்களில் மக்களிடையே எரேமியா தடையின்றி .............க் கொண்டிருந்தார்.
12. இரவோடு இரவாய் நகரைவிட்டு வெளியேறி .................... நோக்கித் தப்பியோடினர். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
13. ...................... முதல் பெரியோர்வரை மக்கள் எல்லோரையும் அருகில் அழைத்தார்.

**வலமிருந்து இடம்**

2. எனவே அவர் மக்களிடையே ....................... வந்தார்.
3. உங்களை மீட்கும் பொருட்டும் அவனுடைய ............. உங்களை விடுவிக்கும் பொருட்டும் நான் உங்களோடு இருக்கின்றேன்.
7. ஏனெனில் அவர் இன்னும் .................. அடைக்கப்படவில்லை.
9. நன்மை அன்று தீமை விளைவிக்கவே அவர்கள் .................. நான் விழிப்பாய் இருக்கிறேன்.
11. நீங்கள் கைப்பற்றியுள்ள ................. குடியிருங்கள்.
16. உங்கள் வேண்டுகோளை இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் முன் ..................... மன்றாடுமாறு நீங்கள் என்னை அனுப்பினீர்கள். (3வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது.)
18. அவர் அங்கு பட்டினியால் ................... போவார்.
21. நகரில் ...................... ஏதும் கிடையாது.

**கீழிருந்து மேல்**

8. இந்நாள்வரை அவர்கள் எனக்குப் .................. போகவில்லை.
10. உங்களை நீங்களே ........................க் கொண்டீர்கள்
11. ஏனெனில் நீ என்னில் ................... வைத்துள்ளாய்.
17. எரேமியாவுக்கு ...................... ஆணையிட்டுக் கூறினார். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது.)
18. பபிலோனிய ...................... நீர் கையளிக்கப்படுவீர்.
19. இவன் இவ்வாறு பேசி ................... எஞ்சியுள்ள போர் வீரர்களையும் மக்கள் அனைவரையும் மனம் தளரச்செய்து வருகிறான்.
20. அவர் விருப்பப்படியே அவரை ......................

**விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 223**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
M. பிளன்ரீனா
கன்னியர் மடவீதி, வவுனியா

**இரண்டாம் பரிசு:**
N. லக்சிக்கா –
துள்ளுக்குடியிருப்பு,

**மூன்றாம் பரிசு:**
S. லூக் அபிஷேக் -
சின்னக்கடை, மன்னார்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 37 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 31 பேர்.**

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.223ல்**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
**பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்**

1. பி. நோவா – பெற்றா, மன்னார்
2. அ. திரேசா – முருங்கன் பிட்டி, முருங்கன்
3. X. குணமணி – பெரியக்கடை, மன்னார்
4. S. லூக் அபிசேக் - சின்னக்கடை, மன்னார்
5 செ. வளன் நிலுஜன் துரம் - மரியாள் வீதி, தாழ்வுபாடு
6. A. பிறைனி – குழந்தையேசுபுரம், மன்னார்
7. K. தனுசிகா – துள்ளுக்குடியிருப்பு, பேசாலை
8. செ. இன்பெஎ்ரா டயஸ் - மரியாள் வீதி, தாழ்வுபாடு
9. றா. கரீஸ்மா டலிமா – ஆனாள் நகர், வங்காலை
10. றபேக்கா பற்றிக் - சின்னக்கடை, மன்னார்
11. றா. மேரி பிறக்சி டயஸ் - ஆனாள் நகர், வங்காலை
12. ஆ. றாபன் ஜீசஸ் டலிமா - ஆனாள் நகர், வங்காலை
13. ஜோ. குணசீலன் - தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்
14. றி. அமலதர்சினி குரூஸ் - மறிச்சிக்கட்டி, முள்ளிக்குளம்
15. கு. ஆன் பொபிஷா - தலைமன்னார் மேற்கு
16. றி. ஆன் ஆஸ்லின் துரம் - மறிச்சிக்கட்டி, முள்ளிக்குளம்
17. கு. ஆன் ரிஷா - தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்
18. றா. யூட்ஸ்சிக்கா டலிமா – ஆனாள் நகர், வங்காலை
19. கு. டல்சி டலிமா - தலைமன்னார் மேற்கு
20. செ. அஞ்சலா டயஸ் - மரியாள் வீதி, தாழ்வுபாடு
21. ஜெனிங்ஸ் ஜெசிமன் - குழந்தையேசுபுரம், மன்னார்
22. நி. சுபக்ஷிதா பறுனாந்து – 8ம் வடடாரம் பேசாலை
23. செ. ஆன் நியூசிக்கா துரம் - மரியாள் வீதி, தாழ்வுபாடு
24. வி. மேரி றெஜினா – சின்னப்பண்டிவிரிச்சான்
25. நி. கெப்றோன் குரூஸ் - முத்தரிப்புத்துறை
26. சி.வின்சன் யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்
27. J. மதுமிதா – சிறுத்தோப்பு
28. J. நெகோமி ஜெனிலியா பர்ணாந்து – தலைமன்னார்பியர்

# தாயுள்ளம்

வவுனியா கிராமம் ஒன்றில் ஓர் ஏழைத் தாய் தன் மகள்களான மல்லிகா, ராணியோடு வாழ்ந்து வந்தார். கூலி வேலை செய்தாலும் அப்பா இல்லாத குறை தெரியாத அளவுக்கு, மனம் நிறையும்படி வளர்த்து வந்தார். தன் பிள்ளைகளைப் பெரிய பள்ளிகளில் படிப்பிக்க ஆசை இருந்தாலும், வசதி யின்மையால் அரச பள்ளியில் படிப்பித்தார். பிள்ளைகளும் ஆர்வமுடன் படித்தனர். அவர் பிள்ளைகளிடம் எப்போதும் உண்மை, நேர்மை, இறைபக்தியுடன் வாழ வேண்டும் என அறிவுரை கூறுவார். தாயார் வேலை செய்யும் இடத்தில் வேலை அதிகம். கூலியோ குறைவு. எனவே நாளாந்த செலவுக்குப் பணம் போதவில்லை. எனவே, மாலை நேரங்களில் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி, விற்று வந்த பணத்தில் வீட்டுச் செலவுகளைச் சரி செய்தார். வசதி குறைவாக இருந்தாலும் தாயோடு பிள்ளைகள் மகிழ்வாக இருந்தனர்.

நாட்கள் கழிந்தன, வேலைப் பளுவினால் தாயார் நோய்வாய்ப் பட்டார். மல்லிகாவும் தாயிடம் நான் வேலை செய்து உங்கள் இருவரையும் காப்பாற்றுவேன் என்றாள். தாயாரோ, என் உயிர் உள்ள வரை நான் தான் உழைத்துக் காப்பாற்றுவேன், என்று சொல்லி இயலாமையுடனும் வேலைக்குச் சென்று வந்தார். அதனால், உடல்நிலை மோசமாகி, இறுதியில் தான் இறக்கப் போவதை உணர்ந்து பிள்ளைகளை அழைத்து, அருகில் இருந்த திருஇருதய ஆண்டவரின் படத்தை மல்லிகாவின் ஒரு கையிலும், ராணியை மறுகையிலும் ஒப்படைத்து, திருஇருதய இயேசுவின் உதவியுடன் உன்னையும் தங்கச்சியையும் பார்த்துக்கொள் எனும் இறுதிமொழியுடன் அவரின் மூச்சு நின்று விட்டது. பிள்ளைகள் இருவரும் தாயாரின் இறப்பு நிலை கண்டு கதறிக் கதறி அழுதனர். அயலவர் ஓடி வந்து ஆறுதல் கூறி அவர்கள் உதவியுடன் இறுதிச் சடங்குகளும் நிறைவு பெற்றது. ராணி எப்போதும் தாயின் அரவணைப்பில் உறங்குவாள். ஆனால் இப்போது அம்மா இல்லாமல் உறங்க முடியவில்லை நடு இரவில் எழுந்து, அக்கா! ஒரு முறையாவது அம்மாவைக் கூட்டிக்கொண்டு வா, நான் அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நித்திரை கொள்ள வேண்டும் என்று அழுதாள். மல்லிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் அழுகையையும் கவலையையும் அடக்கிக் கொண்டு ராணி! அம்மா ஆண்டவரிடம் சென்றுள்ளார். அவரை நாம் இனிப் பார்க்க முடியாது. அம்மா எம்மிடம் தந்து விட்டுச் சென்ற திருஇருதய ஆண்டவர் தான் இனி எமக்கு அம்மாவும், அப்பாவும். அவரின் அன்பே எமக்கு நிரந்தரம், என்று ஆறுதல் கூறினாள். தன் அரவணைப்பில் தங்கையைத் தூங்க வைத்தாள். நாட்கள் நகர்ந்தன. அவர்களுக்கு உணவுக்கு வழியில்லை என்ற நிலை. மல்லிகா தனது உண்டியலை உடைத்து அரைகுறை உணவு உண்டு, அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்ற நிலையும் வந்தது. அதை விடத் தாயின் பிரிவே பெருந்துன்பமாக எப்போதும் இருந்தது.




ஒருநாள் வகுப்பில் ஆசிரியர், மாணவர்களே! நாம் படிக்கும் நூல்களை விட நம்மைச் சுற்றி நடப்பவற்றை வைத்து நாம் நிறையக் கற்க வேண்டும். யாராவது எம்மை நம்பி ஒரு கடமையை ஒப்படைத்தால், அதை நேர்மையாகவும் உண்மையாகவும் செய்து முடிக்க வேண்டும். எம் வாழ்க்கைப் பாதையில் முட்பாதை, பூம்பாதை என இரண்டு இருக்கும். துன்பம் வரும் போது, அது முட்பாதை எனத் திரும்பி வரக்கூடாது. உங்கள் திறமையால் முட்களைக் கடந்து தான் முட்பாதையும் பூம்பாதையாக மாறும். எனவே முழு விருப்புடன் நடந்தால், முட்பாதை கூடப் பூம்பாதை தான் எமது முயற்சியில் தான் அனைத்தும் தங்கியுள்ளது எனக் கூறிப் பாடத்தை நிறைவு செய்தார். ஆசிரியரின் விளக்கத்தை இரவு முழுவதும் மல்லிகா யோசித்தாள். அது தன் தாயின் அறிவுரையே. எனவே தனது பாடசாலை நேரம் போக மிகுதி நேரத்தில் வேலைதேடச் சென்றாள்.

அவ்வாறு செல்லும் போது ஒருநாள் வழியில் ஒரு பணப் பையைக் கண்டு எடுத்தாள். அதில் நிறையப் பணம் இருந்தது. அதை எப்படியாவது தொலைத்தவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எண்ணும் போதே, ஒரு அம்மா பதட்டத்துடன் எதையோ வழி முழுவதும் தேடிக்கொண்டே வந்தார். மல்லிகா அந்தத் தாயிடம் என்ன தேடுகிறீர்கள் எனக் கேட்டாள். நான் எனது பணப்பையைத் தவற விட்டு விட்டேன் என்றார். இந்தப் பையா பாருங்கள் என்று கேட்டாள். ஆமாம் என்று சொன்னபடியே அதை வாங்கிக் கொண்டு, அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். அப்போது தன் சொந்த மகளையே கட்டி அணைக்கும் உணர்வை அந்தத் தாய் உணர்ந்தார். மல்லிகாவிடம் அவள் குடும்பம் பற்றிக் கேட்டார். அவள் நிலை அறிந்து, அவளுக்குப் பணம் கொடுத்தார். அதை வாங்க மறுத்த மல்லிகா, அம்மா! வேலை ஏதும் இருந்தால் கொடுங்கள் செய்கிறேன் என்றாள். அவரும் தன் தோட்டத்தில் வேலையும் கொடுத்தார். நாட்கள் நகர்ந்தன. மல்லிகாவின் உண்மையும் நேர்மையும் அவருக்குப் பிடித்து விட்டன. அதனால், உறவுகளால் கைவிடப்பட்டிருந்த அந்தத் தாய், மல்லிகாவையும், ராணியையும் தன்னோடு வந்திருக்கும்படி அன்புக் கட்டளையிட்டு தன்னோடு அழைத்து வந்து இருக்க வைத்துத் தன் பிள்ளைகளாகவே வளர்க்க தொடங்கினார். தமது பெற்ற தாயின் பாசத்தைப் போலவே அந்தத் தாயின் உள்ளமும் இருப்பதைக் கண்டு, திருஇருதய இயேசுவுக்கு நன்றி கூறிய படியே மகிழ்வோடு வாழத் தொடங்கினார்.

**உண்மையும், நேர்மையும், இறைபக்தியும் எம்மை எப்போதும் உயர்த்தி நல்வழிப்படுத்தும் என்பது உறுதி..!**


**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968



உதிர்வு 07 09 2007

### திரு. இ. யோகராஜா
(கோவில்குளம், வவுனியா)

சிதைந்து போனோமே - ஐயா நீ விதைத்துப் போன
மரண விதியால் புதைந்து போனது உன் நினைவுகள்
மட்டுமல்ல நாங்களும் தான் மகனே! - உன்
தடம் புரண்ட கால் சுவடுகளை
14 ஆண்டுகளாய் ஏக்கமுடன் தேடுகின்றோம்
இமையமாள்வாய் என்றிருந்தோம் - கண்
இமைக்கும் பொழுதிலே காணாமல் போனாயே!
அழியா உன் நினைவுகளை - கண்ணீரால் அழிக்க
முடியாது செல்லமே...!

பிரிவால் துயருறும்
அன்பு அம்மா, ஐயா, மனைவி, மாமி, மாமா, மகள்,
சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், அன்ரிமார்கள்.

## 15, 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை — திருமதி.திரேசம்மா இராஜதுரை

பிறப்பு:- 25.12.1921
இறப்பு:-02.09.2006

பிறப்பு:- 20.05.1933
இறப்பு:-10.09.2008

(பாலைக்குழி, அடம்பன்)

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் அன்பை அள்ளித் தந்த
தெய்வங்களை எம்மால் மறக்க முடியவில்லையே,
இன்றும் துயர் நீங்கவில்லையே, ஆண்டவன் அடியில்
அமைதியில் இளைப்பாறுங்கள்.

பிரிவால் நினைந்துருகும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 09 1982



உதிர்வு 31 08 1993

### சுதர்ஷினி யேசுதாசன்
(லண்டன்)

சுடர் விட்டெரிந்த எங்கள் மகளே - இதயங்கள்
இடிந்து நொறுங்க சொல்லாமல் சென்றாயே
இறைவனிடம்...!
ஆண்டுகள் இருபத்தெட்டானாலும் ஆறவில்லை
எம் துயர் என் செய்வோம்
"இறை அன்னையின் மடியில் அமைதியில்
இளைப்பாறுங்கள்"

பிரிவுத் துயரில்
அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு "பொன்விழா வாழ்த்து"

1971.09.15 - 2021.09.15



### சௌந்தரநாயகம் எட்வீசம்மா
(யூராசா, இராஜேஸ்வரி)

காத்தான்குளம், வட்டக்கண்டல்

அன்பு நிறைந்த இனிய பெற்றோரே
ஒன்றிணைந்த உங்கள் திருமண வாழ்வின்
பொன்விழா காணும் இந்நன்நாளில்
இன்பம் பொங்க நாம் மகிழ்வாய் வாழ்த்துகின்றோம்
வாழ்க! வாழ்க! வாழியவே

வாழ்த்துவோர்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.


## மடுமாதா மார்கெற்றின் அரிய சேவை
பெரியகடை, மன்னார்

- அனைத்து வகையான பொருட்களும் மலிவு விலையில் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்.
- இரசாயன உரம் பாவிக்கப்படாத பழங்கள் இங்கு உண்டு. (பப்பா, வாழை, மா)
- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்கள் இங்கே கிடைக்கும் (பயறு, உழுந்து, கௌபி, கச்சான்)
- தங்களுக்கென விசேட சலுகையாக நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதற்குரிய பணத்தினை, வாரத்தில் ஒருமுறை அல்லது மாதத்தில் ஒருமுறை எங்களுக்கு நீங்கள் வழங்க முடியும்.
- கூடுதலான பொருட்களை நீங்கள் கொள்வனவு செய்யும் பட்சத்தில் பொருட்களுக்கான கழிவு விலை வழங்குவதுடன் அவற்றை ஏற்றி உங்கள் இடங்களுக்கு கொண்டு செல்லும் வாகன வசதி செய்து தரப்படும்.
- தொலைத்தொடர்பு மூலமாகவும் நீங்கள் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்.

தொ.பே. இல: 023-2222923


# சலேசியன் துறவறசபை அருட்சகோதரியின் முதல் அர்ப்பணம்



மன்னார் மறைமாவட்டத்தின் பொன்தீவுகண்டல் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரி வெர்ஜினியா (லுமினா) அவர்கள் சலேசியன் துறவற அர்ப்பணத்தை கடந்த 05.08.2021 அன்று நிறைவேற்றினார். திரு,திருமதி. சந்தியோகு எமல்டா சாந்தி தம்பதிகளின் மகளாக இவர் தனது பாடசாலைக் கல்வியை மன்/பொன்தீவுகண்டல் றோ.க.த.க பாடசாலையிலும், மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலையிலும் துறவற கற்கையை இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை (நீர்கொழும்பு) ஆகிய இடங்களிலும் நிறைவு செய்தார். அத்தோடு அவர் பொன்தீவுகண்டல் பங்கின் முதல் அருட்சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரியின் துறவற வாழ்வு இறையாசீர் நிறைந்ததாக இருக்க வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.●

2ம் பக்கத் தொடர்ச்சி
### கிளரேசியன் சபையின் அருட்சகோதரர்கள் ...

Bro. டெஸ்மன் குரூஸ் CMF, Bro. ராஜசேகர் டயஸ் CMF, Bro. சிலைக்சன் CMF, Bro. அன்ரனி CMF, Bro. சுதர்சன் CMF, Bro. டெஸ்மன் ராஜ் CMF, Bro. ஜோன்சன் CMF, Bro. ஆன்றோய் CMF மற்றும் Bro. டெறிக் CMF.●

2ம் பக்கத் தொடர்ச்சி
### ஆயர் பேரருட்திரு றேமன் ...

ஆயர் பேரருட்திரு. றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்கள் தம்முடைய மறைமாவட்டத்திலே சகல மக்களுக்கும் நிறைவான பணியாற்றி உண்மை கிறிஸ்தவ வாழ்வு எதுவென்றும் ஆயத்துவ பணியில் மந்தைகளை நோக்கி தேடிச் செல்கின்ற ஒரு மேய்ப்பனாக அவர் ஆற்றி வருகின்ற பணிகளையும் நாம் கண்டுள்ளோம்.

அவர் மலையக பகுதியிலே வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியிலே சிறப்பான ஆன்மீகப் பணிகளை நிறைவேற்றுகின்ற ஆயராகவும், தெனியாய பகுதிகளிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு புதிய பங்குகளான அனிங்கந்த, செல்வகந்த ஆகிய புதிய பங்குகளை உருவாக்கி அங்கே எல்லா மக்களும் இறைஅருளை பெற்று இறை நம்பிக்கையிலே வளரக்கூடிய விதத்திலே நற்பணியாற்றுகின்ற ஒரு ஆயராக விளங்குகின்றார். தொடர்ந்தும் இறைவன் நிறைவான ஆசீரோடும் உடல் உள நலம் பெற்று நல்ல முறையிலே இன்னும் பணியாற்ற நாங்கள் செபித்து நிற்கின்றோம்.●

# இறைபதமடைந்தனர் இரு அருட்சகோதரிகள்



திருக்குடும்பக் கன்னியர் சபையை சேர்ந்த அருட்சகோதரி தெரசிற்றா யோன்பிள்ளை கடந்த 11.09.2021 அன்று இறைபதமடைந்தார். இவர் 29.08.1930 அன்று பிறந்தார். தனது முதலாவது வாக்குத் தத்தத்தை 18.12.1951 அன்று பெற்று நித்திய அர்ப்பணத்தை 18.12.1956 அன்று பெற்றுக் கொண்டார். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.



திருக்குடும்பக் கன்னியர் சபையை சேர்ந்த அருட்சகோதரி நீக்கிலஸ் குரூஸ் கடந்த 07.09.2021 அன்று இறையடி சேர்ந்தார். இவர் 29.10.1943 அன்று பிறந்த இவர் தனது முதலாவது வாக்குத் தத்தத்தை 18.06.1963 அன்று பெற்றுக் கொணடதுடன் நித்திய அர்ப்பணத்தை 08.09.1968 அன்று பெற்றுக் கொண்டார். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

2ம் பக்கத் தொடர்ச்சி
### விடத்தல்தீவு புனித அடைக்கல ...

நவதின திருப்பலிகள் நாளுக்கு ஒரு தலைப்பில் பங்குத் தந்தையால் மறையுரையாற்றப்பட்டு நற்கருணை வழிபாடானது அருட்பணி சதாஸ்கர் அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. திருவிழா திருப்பலி நிறைவில் பங்குத் தந்தையால் அன்னையின் திருச் சுருப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. 08.09.2021 அன்று மாலை 3.00 மணிக்கு 153 மணி செபமாலையுடன் கொடிமரம் இறக்கப்பட்டு திருவிழா நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.●

### பங்குத்தந்தையர்களுக்கு...

தங்களது பங்குகளில் நடைபெறும்
சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள்
தொடர்பான விடயங்களை மன்னாவில்
பிரசுரிக்கும் பொருட்டு
எமது மன்னா மின்னஞ்சல்
முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.
நன்றி - மன்னார நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 16.02.1934 விண்ணில்: 25.08.2021

**திருமதி. பெர்னடேற் புஷ்பம் செல்வறட்ணம்**



இன்று இறைவனோடு ஒன்றித்தாயம்மா -நீ அன்று இறைவனில் நம்பிக்கை வைத்ததன் பயனாய் மகவொன்றை இறைபணிக்கென கையளித்த தாய் என பெருமை கொண்டாய் வாழ்ந்த காலமதில் வந்த துன்பம் அத்தனையும் சித்தமென, இறை சித்தமென மனம் கொண்டு ஏற்று வாழ்ந்தும் கைம்பெண்ணான போதும் உன் மகவுகளை தனித்து நின்று வளர்த்தெடுத்த உன் திறமை தான் என்னே! ஆற்றல் திறமைகளை வளர்த்தெடுக்க காலமது தடுத்தாலும் முயற்சி திருவினையாக்கும் எனும் உண்மை உன்னில் கண்டோம் தாயே ஆடை அலங்காரங்களிலே தனித்துவம் உன் அழகு புஷ்பம் என அன்பாக அழைக்கும்போது பூவின் மென்மை உன் பேச்சு பெண்ணுக்கு அழகு பொன்நகை அல்ல புன்னகை தான் என்பதும் உண்மை என உம்மில் கண்டோமன்றோ அம்மா உன் இழப்பால் மனம் துடிக்கின்றோம் துயரத்தை கண்ணீரில் கரைக்கின்றோம் மனித வாழ்வு நிலைஅற்றதெனும் கூற்று உண்மை என உணர்கின்றோம் உம் ஆத்துமம் இறைவனில் இளைப்பாறுவதாக என வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், நண்பர்கள்

## 4 மாத, 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. அல்பிறட் அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர்)
பிறப்பு : 15.03.1930
இறப்பு : 19.05.2021

**திருமதி. மாக்கிறேற் அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
பிறப்பு : 30.03.1934
இறப்பு : 19.08.2019
மாந்தை





மாதோட்டத்தின் முத்துக்களே, மாந்தை நல்நகரின் வித்துக்களே, தானங்களில் சிறந்த தானமான கல்வீத்தானத்தை வழங்கிய ஆசான்களே, மன்னார், மடு கல்வி வலயங்களில் ஆசிரியப்பணியே அறப்பணியாக மாணவர்களுக்கு கல்வியையும், ஒழுக்கத்தையும் விதைத்து தம் பிள்ளைகளும் அப்பணியை தொடர வழிகாட்டிய அம்மா, ஐயா உங்கள் இருவரதும் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 04 1949



உதிர்வு 16 07 2021

**திரு. செபஸ்ரியான் கிறிஸ்தோப்பர்**
(முருங்கன்பிட்டி, முருங்கன்)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோ. 11:25)

அன்பு முகம் மறைந்தாலும் அழியாத உங்கள் நினைவலைகள் ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே உங்கள் நினைவுகள் எம் உயிரோடு, உணர்வோடு கலந்து இதயத்தில் என்றும் எங்களோடு வாழ்கின்றீர்கள் எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும் என்றும் உங்கள் நினைவுடன்

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 6ஆம் மாத நினைவஞ்சலி

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்"

மண்ணில் 29 07 1951



விண்ணில் 23 03 2021

**திருமதி. எலிசபெத் குரூஸ் (ஜொய்சி)**
(எழுத்தூர்)

ஆறு மாதங்கள் தான் கடந்து போனது - அம்மா நீங்கள் பட்ட உடல் வாதைகள் ஆறாது எம் மனதில் என்றும் விண்ணக வீட்டிலாவது உங்கள் ஆன்மா இளைப்பாற இறைவனை வேண்டுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 07 1935



உதிர்வு 04 09 2020

**திரு. அல்பிறட் சில்வா**
(தலைமன்னார் கிராமம்)

"உயிருள்ளவரை உமை நேசித்தோம், இறந்த பின்பும் உமை மறவோம்"

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே! எம் பாசமிகு செல்லகுட்டி ஐயாவே! நீர் எமை பிரிந்து ஓராண்டு ஆனதுவே! உம் பிரிவின் வலியும் எமை வாட்டுகிறதே! எம் மனங்களில் உம் அன்பின் நினைவுகளை தாங்கி உமக்காக என்றும் வேண்டுகிறோம். விசுவாச விதை எம்மில் வளர நீர் செய்த தியாகங்களினை நினைந்து உம் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற செபிக்கின்றோம் எந்நாளும்...!

பிரிவால் நினைந்துருகும்:
குடும்பத்தினர், உறவினர்கள்.

## 19ம், 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ஜெகநாதன் பீரிஸ்**
பிறப்பு: 26.01.1945
இறப்பு: 02.01.2002

(பேசாலை)

**திருமதி.வெற்றிமேரி துரம்**
பிறப்பு: 25.09.1949
இறப்பு: 07.09.2020

இவ்வுலகில் ஆதரவு இல்லாமல், அரவணைக்க, அன்பு செய்ய உங்களைப் போன்று யாரும் இல்லையே.
நீங்கள் இல்லாத இந்த உலக வாழ்க்கையை எண்ணி ஏங்கி தவிக்கின்றோம். நாம் இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்று நீங்கள் வாழ்ந்து காட்டிச் சென்றீர்கள்.
உங்களைப் போன்று நாங்களும் பிறரன்பு கொண்டவர்களாக ஓடிச்சென்று உதவுபவர்களாக தினமும் செபிப்பவர்களாக வாழ மரியன்னை மூலமாக இறைவனை மன்றாடுங்கள்.
எம்மைப் படைத்த எல்லாம்வல்ல இறைவா,
எம் அம்மா அப்பாவுக்கு உமது நித்திய வீட்டில் இடமளியும்.
ஆமென்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

## 10ம், 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. B.J.A.இம்மானுவேல்**
மலர்வு: 25.12.1932
உதிர்வு: 09.08.2011



**திருமதி. சவிரியாச்சி புனிதவதி**
மலர்வு: 07.03.1940
உதிர்வு: 08.10.2020

(பெரியகடை, மன்னார்)

அன்பான பெற்றோரே! எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பல சென்றாலும் உம் நினைவுகள் எம்மை விட்டு விலகாது ஆண்டவன் சந்நிதியில் நீங்கள் அமைதி பெற்று மகிழ அடியவர் நாம் இரந்து இறைவன் பாதத்தில் அமர்ந்து வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1954 06 12



இறப்பு 2018 08 20

**கிறிஸ்ரீன் தேக்லா குரூஸ்**
(4ம் வட்டாரம், பேசாலை)

"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரின் முடிவு மகிழ்ச்சிக்குரியதாய் அமையும் அவர்கள் இறக்கும் நாளில் ஆசி பெறுவார்கள்"

அன்பு முகம் மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்! ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே! உங்கள் நினைவலைகள் எம் உயிரோடு உணர்வோடு கலந்து இதயத்தில் என்றும் நீங்கள் எங்களோடு வாழ்கின்றீர்கள் மண் விட்டு மறையாமல் எந்நாளும் இருப்பீர்கள் எம் மனங்களில்...! உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 077-3517707
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-3517707 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும், தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org